RE/MAX REALTOR BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710


மலர்:- 29, 28 ஒக்டோபர் 2022 இதழ்:- 27

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# என்னைக் கொலை செய்ய முயற்சித்தவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சி - சந்திரிகா



என்னைக் கொலை செய்ய முற்பட்டவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களை சிறையிலடைத்து வைத்திருப்பதால் எனது கண் மீளக் கிடைக்கப் போவதில்லை.

அவர்களுக்கு தண்டனை வழங்கி 8 ஆண்டுகள் கடந்த போதே அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதே தனது விருப்பமாகக் காணப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்க தெரிவித்தார். (7ம்பக்கம்)

# இந்தியா ஈழத்தமிழர் மீது மீளவும் ஒரு போலியான தீர்வைத் திணிக்க முயலுகிறதா?



இலங்கை அரசியலில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடியை அடுத்து பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. உள் நாட்டு அரசியலிலும் பிராந்திய சர்வதேசத் தளத்திலும் ஈழத்தமிழர் விடயம் பொறுத்து அதிக மாற்றங்கள் அரங்கேறி வருகின்றன.

வெளிப்படையாகப் பார்த்தால் ஜெனீவாவில் நிகழ்ந்த வாக்கெடுப்பை அடுத்து நேர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளமை, விடுதலைப்புலிகளின் போராளிகள் கட்சியினர் புதுடில்லி சென்று உரையாடி திரும்பியுள்ளமை, சீனாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் வடக்கில் கோஷங்கள் எழுந்துள்ளமை, மீளவும் (21ம் பக்கம் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!



18 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence / Morningside

**Scarborough** $499,800
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route

### Sheppard / Markham

**Scarborough** $449,900
Bedrooms: 2 Washrooms: 1
Beautiful Well Maintained Space

### Sheppard & Warden

**Scarborough** $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony

### 401 & Mccowan

**Mississauga** $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Ttc Bus Within Walking Distance


### Warden & St Clair

**Scarborough** $629,000
Bedrooms: 2+1 Washrooms: 1
792 Sf Of Low-Rise Condo


### Markham & Eglinton

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Appliances

### John W Taylor / Ferris Lane

**New Tecumseth** $839,000
Bedrooms: 4 Washrooms: 3
Open Concept, H/Wood Floors

### Simcoe & Ritson

**Oshawa** $850,000
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors

### Altona / Finch

**Pickering** $979,000
Bedrooms: 3 Washrooms: 4
Brand New Double Car Garage

### Harmony & Taunton

**Oshawa** $1,224,888
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Schools, Shop

### Donald Cousens & Hwy 7


**Markham** $1,488,888
Bedrooms: 4 Washrooms: 4
Less7 Yrs Old Beautiful 9Ft Ceilings

### Hwy 48/Castlemore



**Markham** $3,600
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Go Train Station

### Hwy 7/Donald Cousens


**Markham** $3,500
Bedrooms: 4 Washrooms: 3
Approx. 2500 Sq Ft

### Church / Rossland


**Ajax** $3,175
Bedrooms: 4 Washrooms: 3
Family Friendly Neighbourhood

### Edenbrookhill / Sandalwood


**Brampton** $1,800
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Markham Rd & 16th Ave


**Markham** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout; 9 Feet Ceiling

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# இலங்கை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிக்கும் கோவை குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டோருக்கும் தொடர்பு?

இலங்கையில் மூன்று வருடங்களின் முன்னார் இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய குழுவின் தலைவராக செயற்பட்ட சஹ்ரான் ஹாஷிமிற்கு இந்தியாவுடன் காணப் பட்ட தொடர்புகள் குறித்து மற்று மொரு தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தின் கோயம்புத்தூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காரில் இடம் பெற்ற வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோயம்புத்தூரில் காரில் இடம் பெற்ற வெடிச்சம்பவத்தில் ஜமீஷா முபின் என்பவர் உயிரிழந்தார். உயிரிழந்த நபரு க்கும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சந்தேகநபரான சஹ்ரான் ஹாஷி மிற்கும் இடையில் தொடர்பு இருந்த தாக, இந்திய பாதுகாப்புதுறை அதிகாரி கள் அறிவித்துள்ளதாக இந்திய ஊடக ங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முகநூல் வாயிலாக இவர்கள் இரு வரும் தொடர்புகளைப் பேணி வந்ததாக இந்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்து ள்ளது.

கோயம்புத்தூரில் இடம் பெற்ற வெடி ப்புச் சம்பவம் தொடர்பில் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1998 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் 11 இடங்களில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுடன், தற்போது கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர் களும் தொடர்புகளைப் பேணியுள்ளதாக இந்திய பாதுகாப்புத் துறையினர்



தெரிவித்துள்ளனர். ஜமீஷா முபின் உயிரிழந்த காரில் இடம்பெற்ற வெடி ப்புச் சம்பவத்திற்கும் வெளிநாட்டவர் களுக்கும் தொடர்புகள் இருக்கக்கூடும் என சந்தேகிப்பதாகவும் சம்பவம் தொடர் பான விசாரணையை இந்திய தேசிய புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய பயங்கரவாத விசாரணைப் பிரி வினரால் 2019 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட ISIS அமைப்புடன் நேரடி தொடர்புகளைப் பேணிய அசாருதீன் என்பவருடனும் ஜமீஷா முபின் தொட ர்புகளைப் பேணியுள்ளமை கண்டறிய ப்பட்டுள்ளது. இலங்கையில் மேற்கொள் ளப்பட்ட ஏப்ரல் 21 பயங்கரவாத குண் டுத் தாக்குதலை முன்னெடுத்த குழு வின் தலைவரான சஹ்ரான் ஹாஷிமுடன் 2019 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே அசாருதீன் என்பவர் தொடர்புகளைப் பேணியுள்ளதாக இந்திய பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளதை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இலங்கையின் உணவுப் பாதுகாப்பு நிலைமை மேலும் மோசமடையுமென உலக உணவு அமைப்பு எச்சரிக்கை

இலங்கையில் நிலைமை மேலும் மோசமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் எச்சரித்து ள்ளது. இலங்கையில் உக்கிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடியானது உணவுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக தொடர்ந்தும் இருப்பதாக அந்த அமை ப்பு தெரிவித்துள்ளது.

அந்த வகையில் 2022 ஒக்டோபர் முதல் 2023 பெப்ரவரி வரையான பருவத்தில் தொடர்ச்சியான உதவி இல்லாமல் நிலைமை மோசமடையக்கூடும் என்று உலக உணவுத்திட்டம் தெரிவித்துள் ளது. கொழும்பின் நகர்ப்புறங்களில் விலை தொடர்ந்து அதிகரித்து வரு கின்றது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெ ண்ணின்படி, உணவுப் பணவீக்கம், ஆகஸ்ட் மாதத்தில் 93.7 சதவீதத்திலி ருந்து செப்டம்பர் மாதத்தில் 94.9 சத வீதமாக உயர்ந்துள்ளது.

மூன்று மாத காலத்திற்கு 1 மில்லியன் குழந்தைகளுக்கு பாடசாலை உணவை வழங்குவதற்காக, உலக உணவுத் திட்டம் 1,475 மெற்றிக் தொன் அரிசி மற்றும் 775 மெற்றிக் தொன் இரும்புச் சத்துள்ள அரிசியை பெற்றுள்ளது.

இந்த நிலையில் அவற்றின் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படும். அத்துடன் அது அரசாங்கத்தின் தேசிய பாடசாலை உணவுத் திட்டத்தின் மூலம் மாணவர் களுக்கு நேரடியாக கிடைக்கக்கூடியதாக இருக்கும். இதேவேளை ஊட்டசத்து உதவி தொடர்வதை உறுதி செய்வதற் காக, அரசாங்கத்தின் திரிபோஷ திட்டத் துக்கு மூலப்பொருட்களை வழங்கு வதற்கு அரசு மற்றும் நன்கொடையாளர் களுடன் இணைந்து செயற்படுவதாக உலக உணவுத்திட்டம் தெரிவித்துள் ளது.

இது இவ்வாறிருக்க இலங்கையில் வைத்தியசாலைகளிலும் ஏனைய சுகா தார நிலையங்களிலும் புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் மரு ந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டு ள்ளதாக அரசாங்க மருந்தாளர் சங்கத் தின் தலைவர் அஜித் பீ.திலகரத்ன தெரி வித்துள்ளார். இதனால், புற்றுநோய்கான சிகிச்சைகள் முற்றாக முடக்கப்படும் ஆபத்து உருவாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பற்றாக்குறை காரணமாக புற்று நோய் சிகிச்சை பிரிவுகளில் அதிகளவான நோயாளிகள் இக்கட்டான நிலையில் உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். அதனால் புற்றுநோய் சிகிச்சை பிரிவுகள் மூடப்படும் நிலை உள்ளன. இதுவரை 15 மருந்துகள் அரசு மருத்துவ மனைகளில் கிடைக்காததால், நோயாளி கள் அதிக விலை கொடுத்து தனியார் மருந்தகங்களில் அவற்றை வாங்க வேண்டியுள்ளது. அரச மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் மருந்துகளின் விலையை அவ்வப் போது உயர்த்துவதால், மருந்துகளின் விலை கிட்டத்தட்ட 300 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

இதன்படி, புற்று நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் ஒரு குப்பியின் போன்ற மருந்துகளின் விலை 300,000 ரூபா வரை அதிகரித்துள்ளது. இந்தநிலையில் மருத்துவத் துறையின் மூலம் இந்த பற்றாக்குறை மருந்து வகைகளை நிரப்புவதற்கான சரியான திகதி எதுவும் இதுவரை அறிவிக்கப் படவில்லை என்று அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் பீ.திலகரத்ன மேலும் தெரிவித்தார்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

Restaurant
வேலைக்கு ஆள் தேவை
மார்க்கத்தில் அமைந்துள்ள இலங்கை இந்திய உணவகத்திற்கு இலங்கை இந்திய உணவுகளை தயாரிக்கக் கூடிய அனுபவமுள்ள Cook உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 647 545 2430
2291681 Ontario Ltd - Cansintraders@gmail.com

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# வடக்கில் அதிகரித்திருக்கும் போதைப் பொருள் பாவனையின் பின்னணியில் ஆயுத படைகள்

வடக்கில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையின் பின்னணியில் ஆயுதப்படைகளே உள்ளன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையிலுள்ள படைகளில் ஏறத்தாழ 70 சதவீத மானவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே குவிக்கப்பட்டிருக் கின்றனர். போதைவஸ்தை கொண்டு வர அனுமதிப்பவர்களாகவும் அதனை கொண்டு வருபவர்கள் மற்றும் விற்பவர்களை ஊக்குவிப்பவர்களாகவும் அவர்களே காணப்படுகின்றனர் என்றும் சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம் பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சிறிதரன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

போதைப் பொருள் வியாபாரிகளை பொலிஸார் கைது செய்வதில்லை. பெருந்தொகையான கஞ்சா இங்கு கடத்தப்படுகின்றது என்றால் அதனை தடுக்கின்ற வல்லமை இலங்கையின் படைகளுக்கு இல்லையா? தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கவும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கவும் மட்டுமே இவர்களுக்குத் தெரியுமா? என்றும் சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

தமிழ் இளைஞர்களை தமது இனம் பற்றியோ தேசம் பற்றியோ சிந்திக்க விடாது தடுக்கும் நோக்கில் திட்டமிட்டே போதைப்பொருள் பாவனையை இவர்கள் ஊக்குவிக்கிறார்கள் என்றும் சிறிதரன் தனது உரையில் குறிப்பிட்டார். போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது எதிர்கால சந்ததியினரை மீட்க வேண்டிய பொறுப்பு வெறுமனே அரசியல்வாதிகளிடம் மட்டும் சுமத்த முடியாது என்று சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், சமூகப் பொறுப்புணர்ந்து அனைத்து தரப்பினரும் இணைந்தே கட்டுப்படுத்த வேண்டும். பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற் றுடன் ஒவ்வொரு தமிழனும் சிந்தித்து இளம் சமூக த்தினரை அழிவில் இருந்து மீட்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## போதைப் பொருட்களின் பாவனை யாழில் மோசமான நிலை கட்டுப்படுத்த மக்களின் ஆதரவைக் கோரும் அரச அதிபர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை வெகுவாக அதிகரித்துள்ளதால், அனைத்துத் தரப்பினரும் இதற்கு ஒத்துழைப்பு தந்து, இதை கட்டுப்படுத்த வேண்டும் என மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும்,அதனுடன் தொடர்புடைய குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவித்த யாழ். அரசாங்க அதிபர் இதனைக் கட்டுப் படுத்துவதற்கு தாம் பல முயற்சிகளை எடுத்து வருவதாகவும், என்றாலும் வெளி மாவட்டத்திலிருந்து போதைப் பொருள் இங்கே கொண்டு வரப்படுகிறதா, இல்லையென்றால் கடல் மார்க்கமாக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படுகிறதா என்பது சரியாகத் தெரியவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனைக் கட்டுப்படுத்த சகல தரப்பினரும் முன் வர வேண்டும் என்று அழைப்பு விடுத்த அவர் தம்மால் வழங்கப்படும் விழுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில், வாராந்தம் சுமார் 20 பேர் போதைக்கு அடிமையானவர்கள் யாழ்ப்பாணத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் இது மிகவும் மோசமான நிலை என்றும் மாவட்டச் செயலர் மகேசன் சுட்டிக் காட்டினார்.

பெயர் குறிப்பிடப்படாத பல்வேறு போதைப்பொருட்கள் யாழ்ப்பாணத்தில் பயன்பாட்டில் உள்ளது என்றும் குறிப்பிட்ட யாழ்.அரசாங்க அதிபா◌் மகேசன் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் என்றும் வலியுறுத்தினார்.


இதேவேளை தென்னிலங்கையில் பாணந்துறை எலுவில சந்தி பகுதியிலுள்ள கடையொன்றில் புகையிலை கலந்த மாவா எனப்படும் போதைப் பொருளை பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்த ஒருவர் சுமார் பத்து இலட்சம் பெறுமதியான மாவா போதைப்பொருளுடன் கைது செய்யப் பட்டுள்ளதாக பாணந்துறை ஊழல் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் கடையில் மறைத்து வைத்திருந்த சுமார் பத்து கிலோ மாவா போதைப் பொருளையும் காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

பாணந்துறை இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவின் பதில் பணிப்பாளர் உதய குமாரவிற்கு கிடைத்த தகவலின் பிரகாரம் பாணந்துறை வல்லான ஊழல் ஒழிப்பு பிரிவின் பதில் பணிப்பாளர் பிரதம பரிசோதகர் இந்திக வீரசிங்கவின் பணிப்புரைக்கமைய குறித்த கடையை சுற்றிவளைத்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

மெழுகுப் பைகளில் அடைக்கப்பட்ட 25 கிராம் மாவா போதைப்பொருள் ரூ.1000 என்ற விலையில் விற்பனை செய்யப்படுவதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக காவல் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இங்கு மேலதிக வகுப்புக்கு வரும் பாடசாலை மாணவர்கள், மாணவர்கள் இதற்கு அடிமையாகி உள்ளதாக கவல்தறையினர் கூறுகின்றனர்.

சந்தேகநபர் நாற்பத்தெட்டு வயதுடைய திருமணமாகி பிள்ளைகளை உடையவர் எனவும், சந்தேகநபர் அதே பகுதியைச் சேர்ந்தவர் எனவும், அவர் பாணந்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

கந்தசஷ்டி விரத வழிபாடுகள்

4ம் நாள் வெள்ளிக்கிழமை (28 ஒக்டோபர் 2022)
பூஜை உபயம்:- வரதராஜன் குடும்பம்

5ம் நாள் சனிக்கிழமை (29 ஒக்டோபர் 2022) வேல் வாங்குதல்
பூஜை உபயம்: யோகமலர் சிவநாதன் குடும்பம்

6ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (30 ஒக்டோபர் 2022) சூரன்போர்
பூஜை உபயம்: சிவஞானசுந்தரம் பிருந்தன் குடும்பம்

31ஒக்டோபர் 2022 திங்கள்கிழமை
அதிகாலை 5.00 மணிக்கு பாறணை
பூஜை உபயம்: Dr. தவா குடும்பம்

31ஒக்டோபர் 2022 திங்கள்கிழமை இரவு திருக்கல்யாணம்
பூஜை உபயம்: வரதன் கீதா குடும்பம்

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# ஒன்ராறியோவில் கல்விச்சபைக்கு போட்டியிட்ட 3 தமிழர்கள் பெருவெற்றி பெற்றனர்!

கனடாவின் ஒன்ராறியோ மாநகர, நகர, உள்ளூராட்சி, கல்விச்சபை உறுப்பினர்களுக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் நான்கு தமிழர்கள் அமோக வெற்றி பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது. இதில் மூன்று தமிழர்கள் இரண்டாவது தடவையாக மீண்டும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஸ்காபரோ வடக்கு தொகுதியில் கல்விச் சபை உறுப்பினர் பதவிக்கு மீண்டும் போட்டியிட்ட யாழினி ராஜகுலசிங்கம் வெற்றி பெற்றார். ஸ்காபரோரூச் பார்க் தொகுதியில் கல்வி சபை உறுப்பினர் பதவிக்கு மீண்டும் போட்டியிட்ட அனு சிறீஸ்கந்தராஜா வெற்றி பெற்றார். ஸ்காபரோ மத்திய தொகுதியில் கல்வி சபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்ட நீதன் சாண் அமோக வெற்றி பெற்றார்.

மார்கம் நகரில் வோட் 7 கவுன்சிலர் பதவிக்கு போட்டியிட்ட யுவனீற்ரா நாதன் அமோக வெற்றி பெற்றார். இதேவேளை, வெற்றி பெற்ற நான்கு தமிழர்களுக்கும் வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

# இனப்படுகொலை இடம்பெறவில்லை! சரணடைந்தவர்கள் காணாமல் போகவில்லை!

## காணாமல் போனோர் அலுவலகத் தலைவர் கூறுகிறார்

முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்படுவதை நிராகரித்துள்ள அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த இராணுவத்தினர் 60.000 பொது மக்களை மீட்டனர் என குறிப்பிட்டுள்ளார்.

2009இல் இறுதி யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்படுவதை இலங்கையின் காணாமல் போனவர்களிற்கான அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த மறுத்துள்ளார். ரொய்ட்டருக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்

காணாமல் போனவர்கள் குறித்த அலுவலகம் போதியளவு செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை அவர் நிராகரித்துள்ளார். சரணடைந்தவர்கள் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்படுவதை நிராகரித்துள்ள அவர் அதற்கான ஆதாரங்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப்புலிகளால் கடத்தப்பட்டனர் அல்லது அவர்களிற்கு எதிரான குழுக்களால் கடத்தப்பட்டனர் என காணாமல்போனவர்கள் அலுவலகத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் குறித்த விசாரணையில் காணாமல்போனவர்கள் என என அறிவிக்கப்பட்டவர்களில் 50 பேர் வெளிநாடுகளில் வசிப்பது தெரிய வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்படுவதை நிராகரித்துள்ள அவர் இராணுவத்தினர் 60.000 பொதுமக்களை மீட்டனர் என குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் எவருமே இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர் அல்லர்

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களில் எவருமே இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர் அல்லர் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். இரட்டை பிரஜாவுரிமை தொடர்பாக ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இரட்டை பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் தேர்தலில் போட்டியிட முன்வந்து, அது தொடர்பில் யாராவது ஆட்சேபனை தெரிவித்தால், அவரது பெயரை நிராகரிக்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை. ஏனெனில் அவ்வாறான ஆட்சேபனைகளை விசாரித்து, உண்மைகளை கண்டறிய அவர்களுக்கு கால அவகாசம் போதாது.

அதன் பிறகு அவர்கள் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டால், நீதிமன்றத்தின் ஊடாக அதனை கேள்விக்குட்படுத்தி, அவரது பதவியை பறிக்க முடியும். கீதா குமாரசிங்கவின் விடயத்திலும் இதுவே நடந்தது. இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதில் நாங்கள் ஆராய்ந்து இருக்கின்றோம்.

தேர்தலில் வேட்பாளர் ஒருவர் போட்டியிடும் போது தேர்தல் ஆணைக்குழு அவரிடமிருந்து ஒரு சத்திய கடதாசியை பெற்றுக்கொண்டு தேர்தலில் போட்டியிட அனுமதிக்கலாம்.

அதன் பின்னர் குறித்த வேட்பாளரது பிரஜாவுரிமை தொடர்பில் நீதிமன்றத்தில் யாராவது கேள்விக்குட்படுத்தினால், அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக பொய் சாட்சி சொன்ன குற்றத்துக்காக அவருக்கு தண்டனையையும் விதிக்க முடியும். இவ்வாறான ஏற்பாடு கொண்டு வரப்பட்டால், இரட்டை பிரஜாவுரிமை கொண்ட பலரும் தேர்தலில் போட்டியிட பின்னடிப்பார்கள்.

புதிய திருத்தத்தின்படி இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் தற்போதுள்ள பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தால், அவர்கள் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கான தகுதியை இழப்பார்கள்.

இரட்டை பிரஜாவுரிமை உள்ள பலர் தற்போதைய பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள் என்ற செய்தி எமக்கு கிட்டியுள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து, அவர்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# தீபாவளித் திருநாளுக்கு பாரதி இல்லக் குழந்தைகளுக்கு புது உடை வாங்க நிதி

## வழங்கிய GANZ நிறுவன முன்னாள் ஊழியர்கள்

*றொறன்ரோவில் பல்வேறு கிளை ஸ்தாபனங்களுடன் நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்களைப் பணியாளர்களாகக் கொண்டியங்கும் Ganz ஸ்தாபனத்தில் பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் கடந்த பல வருடங்களாக முல்லைத்தீவு புனிதபூமி பாரதி இல்லத்தில் வாழும் குழந்தைகளுக்கு ஈழநாடு பத்திரிகை ஊடாக தீபாவளித் திரு நாளுக்கு சிறப்பு உணவும் புத்தாடையும் அன்பளிப்புச் செய்து வருவது வாசகர்கள் அறிந்ததே. கடந்த பல ஆண்டுகளாக இந்த நிறுவனத்தைச் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் இதுபோன்ற சேவையினை வழங்கி வந்தாலும் கொடிய கொரோனா தொற்றுக் காரணமாக இவர்களின் பலர் வேலையை இழந்துள்ளனர். அப்படி இருந்தும் இவ்வாண்டு 23 ஒக் 2022 நடைபெற்ற விழாவின் போது 2000.00 டொலர்களை தீபாவளித் திருநாளுக்காக வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு ஈழநாடு பத்திரிகை சார்பிலும் அன்பு இல்லக் குழந்தைகள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.*

*இதேவேளை திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் செஞ்சோலைக் குழந்தைகளுக்கு தீபாவளித் திருநாளுக்கு புத்தாடைகள் வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

# தலைமையற்ற அரசியல்?

ஓர் அரசியல் போக்குக்கு தலைமையே அடிப்படையானது. எங்கு தலைமை பலவீனமாக ருக்கின்றதோ அங்கு அரசியலானது சமூகத்தை முன்னோக்கி நகர்த்தும் ஒரு கருவியாக தொழில்படாது.

2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் போக்கானது, வெறுமனே, 'பேச்சு பல்லக்கு தம்பி பொடி நடை' என்பது போல் இருக்கின்றது. பல்வேறு விடயங்கள் பேசப்படுகின்றன. ஆனால், பேசப்படும் விடயங்களை எவ்வாறு அடைவதென்னும் கரிசனை எவருக்குமில்லை – ஏனெனில், எதையும் அடைய வேண்டுமென்னும் நோக்கமே தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இருப்பவர்களுக்கு இல்லை.

ஒருபுறம் வாய்ப்புகளை துல்லியமாகக் கணித்து அதனை நோக்கி தங்களின் ஆற்றலை திரட்டிக் கொள்ள முடியாமல் கூட்டமைப்பு தடுமாறிக் கொண்டிருக்கின்றது. மறுபுறமோ, எதிர்ப்பதை தவிர வேறு எதையும் செய்வதில்லை என்னும் நிலைப்பாட்டோடு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இயங்கி வருகின்றது.

இந்தப் பலவீனத்தை அவ்வப்போது அரசியல் கட்சிகளின்தலைவர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களிலிருந்தே தெளிவாக நோக்கமுடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்பதாக குறிப்பிட்டிருக்கின்றார்.

ஒரு காலத்தில் தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமென்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபக தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெரிவித்திருந்தார். தங்களால் முடியாமல் போகும் போது, தங்களின் இயலாமையை மறைப்பதற்காக கடவுளிடம் மன்றாடுவதும் கூட தமிழ் அரசியல் கட்சிகளின் இயல்பாகும்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்றவில்லை – அவர்கள் தமிழ் மக்களை இரண்டாம் தர பிரஜைகளாக நடத்துகின்றனர் – இந்தக் கூற்று முற்றிலும் சரியானது. இது எந்தளவுக்கு சரியானதோ அதேயளவுக்கு சரியானது, சிங்கள ஆட்சியாளர்கள் நெருக்கடியிலிருக்கும் சந்தர்ப்பங்களை கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டு, தமிழ் மக்களின் நலன்களை வெற்றி கொள்ளும் அரசியல் உபாயங்களை சரி வர தமிழ் தலைவர்கள் என்போர் கையாளவில்லை என்பதும் வெள்ளிடைமலையாகும்.

சிங்கள ஆட்சியாளர்கள் ஒடுக்கு முறையாளர்கள் அவர்களின் ஒடுக்குமுறையிலிருந்து விடுபட வேண்டும் என்பது தான் தமிழ்த் தேசிய அரசியல் இலக்காகும். இந்த நிலையில், சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்று புலம்புவதில் என்ன பொருள் இருக்க முடியும்? இதிலென்ன அரசியல் ஆளுமையுண்டு?

சிங்கள ஆட்சியாளர்கள் இன்னும் வாய்ப்பு கிடைத்தால் ஏமாற்றுவார்கள் தான். ஏனெனில், சிங்கள மக்களை பொறுத்தவரையில் புதியஅரசியல் யாப்பு மற்றும் அடிப்படையான கட்டமைப்பு மாற்றங்கள் என்பவை முதன்மையான பிரச்னைகள் அல்ல.

ஜே. வி. பி. மற்றும் முன்னிலை சோசலிச கட்சிகள் போன்றவை தாங்கள் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதற்காகவே சில மாற்றங்கள் தேவையென்று கூறுகின்றனர்.

கொழும்பில் இயங்கிவரும் சிவில் சமூகக் குழுக்களும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்க்கும் நோக்கில் மாற்றங்கள் தொடர்பில் கோரவில்லை. எனவே, அரசமைப்பு மாற்றம் என்பது அவர்களுக்கு முதன்மையான பிரச்சனைகள் இல்லை. அரசியல் தீர்வு என்பது தமிழ் மக்களுக்கு மட்டுமே முதன்மையான பிரச்னையாகும். இதனைப் புரிந்து கொள்ளாமல் சிங்கள ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றி விட்டார்கள் என்று குரலெழுப்புவதில் எவ்வித பயனும் இல்லை.

உண்மையில், அரசியல் சூழலை சரியாகக் கணித்து கிடைக்கும் சந்தர்ப்பங்களை கையாளத் தெரியாமல் இருப்பது யாருடைய பிரச்னை? சிங்கள ஆட்சியாளர்களின் பிரச்சனையா?

வாய்ப்புகளை நாங்கள் பயன்படுத்தத் தவற விடுகின்ற போது சிங்கள ஆட்சி யாளர்களே நன்மையடைகின்றனர். இதனைப் புரிந்து கொள்ளாமல் முன்னெடுக்கப்படும் தமிழ்த் தேசிய அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்ந்தும் சிங்கள ஆட்சியாளர்களுக்கே வாய்ப்பாக அமையும

# குருந்தூர்மலை - வெடுக்குநாரி ஆலய விவகாரங்களுக்கு விரைவில் தீர்வு காண நவம்பரில் அமைச்சர் டக்ளஸ், விஜயதாஸ விஜயம்

முல்லைத்தீவு குருந்து ார் மலை மற்றும் வவுனியா வெடுக்குநாரி மலை விவகாரங்களை சுமுகமாக தீர்த்து வைக்கும் வகையில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, விஜதாஸ ராஜபக்ஷ ஆகியோர் எதிர்வரும் நவம்பர் முதலாவது வாரத்தில் குறித்த பகுதிகளுக்கான நேரடி விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து, அவற்றுக்கு நியாயமான தீர்வினை வழங்கும் வகையில், ஜனாதிபதி தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் முதலாவது சந்திப்பு கடந்த 25 ஒக் 2022 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன் போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பல்வேறு விடயங்கள் முன ் வைக்கப்பட்டன. அவற்றுள் தமிழ் மக்களின் வரலாற்று தொன்மைமிகு குருந்தூர்மலை, வெடுக்குநாரி ஆலயம் தொடர்பான விவகாரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய குறித்த இரண்டு அமைச்சர்களும் கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

ஏற்கனவே திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் விதுர விக்கிரமநாயக்க ஆகியோர் நேரடியாக சென்று, ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு பொருத்தமான இடத்தினை சம்மந்தப்பட்ட தரப்புக்களின் சம்மதத்துடன் அடையாளப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இதேவேளை இலங்கையின் வடக்கு கிழக்கு மக்களுக்கு மதிப்பான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற தொனிப் பொருளில் மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கில் உள்ள மாவட்டங்கள் அனைத்திலும் சுழற்சி முறையில் 100 நாள் செயல் முனைவின் 86 ஆம் நாள் போராட்டத்தில் வெள்ளாங்குளம் கிராமத்தில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ,மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு வெள்ளாங்குளம் பகுதியில் ஊர்வலத்தை முன்னெடுத்த மக்கள் பின்னர் பிரதான வீதிக்கு அருகில் நின்று தமது கோரிக்கைகளை முன் வைத்தனர். வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், நாங்கள் நாட்டை துண்டாட வோ தனியரசோ கேட்கவில்லை.

இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்.

13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தலங்களின் புனிதத்தை கொச்சை படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே என பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.


கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

அறிவித்தல்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.

கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர்,தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர்,புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

நன்றி.

வணக்கம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.

தொடர்பு இலக்கம்: 647 619 3619

**ctro@tamilremembrance.com.**



தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# ரணில் அரசு 8 அரசியல் கைதிகளுக்கு வழங்கிய பொதுமன்னிப்பு

பல தசாப்த காலமாக சிறைவாசம் அனுபவித்து வந்த 8 தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தீபாவளி தினத்தை முன்னிட்டு, இந்த கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ள தாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரி விக்கின்றது.

அரசியலமைப்பின் 34வது சரத்திற்கு அமைய, இலங்கை நீதிமன்றத்தினால் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கப்பட்ட நபர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டு ள்ளது. இதன்பிரகாரமே, குறித்த தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

சில தமிழ் அரசியல்வாதிகள், ஜனாதிபதி யுடன் நடத்திய கலந்துரையாடலின் பெறுபேறாக இந்த கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறுகின்றது.

ஜனாதிபதியின்ஆலோசனைக்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டில் நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர், குறித்த விசாரணை அறிக்கை நீதி அமைச்சர் மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டு, இந்த கைதிகளின் விடுதலை உறுதி செய்யப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை படுகொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் கைதாகி, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூவரும் விடுதலை செய்யப்பட்டவர் களில் அடங்குவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் இணக்கம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையிலேயே, இந்த கைதிகள் விடுதலை செய்யப்பட்டு ள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு டன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டி ருந்த இருவர், தமது விடுதலையை உறுதிப்படுத்துமாறு கோரி முன்வைத்த மேன்முறையீட்டை வாபஸ் பெற்றுக் கொண்ட நிலையில், அவர்களும் விரை வில் விடுதலை செய்யப்படவுள்ளனர். மேலும், இரண்டு தமிழ் அரசியல் கைதிகளும் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறுகின்றது.

30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 22 ஆண்டுகள் சிறை வாசம் அனுபவித்த மூன்று கைதிகள், 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தற்போது 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஒருவர், 10 ஆண்டுகள் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டு 14 ஆண்டுகள் தண்டனை அனுபவித்து ஒருவர். 05 வருட சிறைத்தண்டனைக்காக 14 வரு டங்கள் சிறைத்தண்டனை அனுபவிக் கும் இருவர் மற்றும் 19 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு 11 வருடங்களாக தண்டனை அனுபவித்து வரும் ஒருவர் இதில் அடங்குகின்றனர்.

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தில் மேலும் ஒரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஜனாதி பதி எண்ணியுள்ளதாக தமிழ் முற் போக்கு கூட்டணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் நாடாளு மன்ற உறுப்பினருமான மனோ கணே சன் தெரிவிக்கின்றார்.

தீபாவளி தின தேசிய நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற் றது.

இதில் கலந்து கொண்ட மனோ கணே சன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வுடன் கலந்துரையாடல்களை நடத்தி யுள்ளார். இதன்போது பொங்கலுக்கு இன்னுமொரு தொகுதி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி



கூறினார் என மனோ கணேசன் தெரி வித்துள்ளார்.

அதே போன்று, மலையக மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஜனாதி பதி செயலணியொன்றை அமைக்கும் தனது கோரிக்கைக்கு, ஜனாதிபதி கொள்கை ரீதியில் இணக்கத்தை வெளியிட்டார் எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை மகிழ்ச்சி அளிப்பதாக நீதி மற்றும் சமத்துவத்திற் கான கனேடியர்கள் அமைப்பு தெரி விக்கின்றது.

நீதி மற்றும் சமத்துவத்திற்கான கனேடி யர்கள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ விற்கும், நீதி மற்றும் சமத்துவத்திற் கான கனேடியர்கள் அமைப்பிற்கும் இடையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 8ம் தேதி விசேட இணையவழி கலந்துரை யாடலொன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனை களின்றி விடுதலை செய்யப்பட வேண் டும் என தாம் கோரிக்கை விடுத்ததாக அந்த அமைப்பு தெரிவிக்கின்றது.

அதே போன்று, சிறைவாசம் அனுப வித்து வரும் தமிழ் அரசியல் கைதி யான ரகுபதி சர்மாவின் விடுதலையை தாம் விசேடமாக வலியுறுத்தியதாகவும் அந்த அமைப்பு கூறுகின்றது.

அதே போன்று சுமார் 10 வருடங்களு க்கு மேல் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதி மற்றும் சமத்து வத்திற்கான கனேடியர்கள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.நன்றி– பிபிசி

# என்னைக் கொலை செய்ய முயற்சித்தவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சி - சந்திரிகா



என்னைக் கொலை செய்ய முற்பட்டவர் களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களை சிறையிலடைத்து வைத்திருப்பதால் எனது கண் மீளக் கிடைக்கப் போவ தில்லை.

அவர்களுக்கு தண்டனை வழங்கி 8 ஆண்டுகள் கடந்த போதே அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதே தனது விருப்பமாகக் காணப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அண்மையில் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகை யில் என்னைக் கொலை செய்ய முற் பட்ட சந்தேகநபருக்கு கொழும்பு – கொட்டாஞ்சேனை ஆலய பூசகர் ஒரு வரும் அவரது மனைவியும் உதவிய தாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 20 ஆண்டுகள் அவர்கள் சிறை தண்டனை அனுபவித்துள்ளனர். அவர் கள் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர் என்பதற்காக என்னுடைய கண் எனக்கு மீளக் கிடைக்கப் போவதில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டப் போவதுமில்லை.

அவர்களை சிறையிலடைக்கப்பட்டு சுமார் 8 ஆண்டுகள் கடந்த போதே அப் போதைய ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்து அவர்களை விடுதலை செய்யுமாறு கோருவதற்கு எண்ணியிருந்தேன். இந்நிலையிலேயே அண்மையில் ஜனாதிபதியின் செயலாளர் தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் இந்த தீர்மானம் தொடர்பில் தெரிவித்தார்.

அவர் என்னிடம் கேட்ட அந்த சந்தர்ப்ப த்திலேயே நான் சரி என்று பதிலளித் தேன். அந்த தீர்மானத்தை நான் விரும்பு வதாகவும் அவரிடம் தெரிவித்தேன். அவர்களுக்கு புனர்வாழ்வளித்தேனும் , அவர்கள் செய்த செயல் தவறு என்பதை உணர்த்த வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

என் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சில தினங்களின் பின்னர் உரையாற்றும் போதும் பதவிப் பிரமாண உரையின் போது விடுதலை புலிகள் அமைப்பிலிரு ந்த இளைஞர் யுவதிகளை எம்முடன் இணைந்து பயணிக்குமாறு அழைப்பு விடுத்தேன் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது என்றார்.

## அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்!

**23 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை ஸ்காபரோவில் நடைபெற்ற உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 10வது ஆண்டாக முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் நடாத்திய இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும் நிகழ்வுக்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை ஈழநாடு பத்திரிகை சார்பிலும் அன்பு இல்லக் குழந்தைகள் சார்பிலும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். உங்கள் அன்பும் ஆதரவுமே அந்தக் குழந்தைகளின் நம்பிக்கை. விழா தொடர்பான புகைப்படங் கள் அடுத்த வாரம் பிரசுரிக்கப்படும். நன்றியுடன் T.K.பரமேஸ்வரன் –ஆசிரியர் ஈழநாடு**

# இனப்பிரச்சனைக்கான முழுமையான தீர்வு என்ற ஜனாதிபதியின் வாக்குறுதியை வரவேற்கின்றோம்!

இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு புதிய அரசியலமைப்பினூடாக ஒரு வருட காலத்திற்குள்ளே செய்து முடிக்கப்படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதியை தமிழ் தேசிய கூட்டமைப்பு வரவேற்கும் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 25ஒக்டோபர் 2022 செவ்வாய்க்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பினூடாக இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு காண்பது தொடர்பான வேலை திட்டம் உடனடியாக நடைபெற வேண்டும். அதை ஜனாதிபதி முன்னெடுக்கின்ற போது எங்களுடைய முழுமையான இணக்கப்பாடும் முழுமையான ஆதரவும் அதற்கு இருக்கும் என்பதே எங்களுடைய உத்தியோகபூர்வ நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த காலப்பகுதியில் எவ்வளவு சேர்ந்து செயற்பட்டோம் என்பதை அவர் அறிவார். 2016 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்ட காலத்திலிருந்து ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இதற்கான முன்னெடுப்புகள் வழிகாட்டல் குழு எல்லாம் அமைக்கப்பட்டது. அந்த வழிகாட்டக் குழுவிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நானும் அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றோம்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான இரண்டு இடைக்கான அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஜனவரி மாதம் இரண்டாவது இடைக்கால அறிக்கையோடு நிபுணர் குழுவினால் வரையப்பட்ட ஒரு முழுமையான அரசியலமைப்பு வரைவு கூட அப்பொழுது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கமினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதை தொடர்ந்து வந்து ஜனாதிபதி தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக முன்நின்ற சஜித் பிரேமதாஸவுடைய தேர்தல் அறிக்கையிலே அந்த முயற்சியில் தொடர்ந்து செயற்பட்டு முடிவை எட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டது.

2016ஆம் ஆண்டு அரசியலமைப்பு பேரவையாக உருவாக்கப்பட்டு பலவித கூட்டங்கள் கலந்துரையாடல்கள் மக்கள் சந்திப்புகள் செய்யப்பட்டு மாகாண சபைகளுடைய பிரதிநிதித்துவத்தையும் பெற்று விசேடமாக தென்பதியிலுள்ள ஏழு மாகாண சபைகளை உள்ளடக்கி வேலை செய்யப்பட்டது. அதனடிப்படையில் தொடர்ந்து முன் சொல்ல ஜனாதிபதி ஆவணம் செய்ய வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்திலே இந்த



வேலை செய்யப்பட்டது. இதனை வெகு விரைவாக தொடர்ந்து முன்னெடுத்தால் ஒரு வருட காலத்திற்குள் இதனை முடிவுக்கு கொண்டு வரலாம். ஒரு வருடம் கூட தேவை இல்லை. அனைவருடைய இணக்கப்பாட்டோடு சகல மக்களுடைய ஆதரவோடு புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும். ஜனாதிபதியின் கருத்தை வரவேற்கின்ற நேரத்தில் இதற்கு முன்னர் பங்களித்ததை போலவே முழுமையான பங்களிப்பை கொடுப்போம் என ஜனாதிபதி அவர்களுக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன் என்றார்.

## தமிழர்களின் தீர்வுக்கு இதுவே அரிய சந்தர்ப்பம் -பிரதமர்

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இது அரிய சந்தர்ப்பம் எனவும், கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தவற விடக்கூடாது என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும். ஒரு வருடத்துக்குள் இந்தப் பணிகள் முற்றுப் பெற வேண்டும் என்பதே தனது நோக்கம்' என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்த நிலையில் பிரதமர் மேற்கண்டவாறு தெரவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசமைப்பு, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி திறந்த மனதுடன் அனைவருடனும் பேச ஆரம்பித்துள்ளார். எனவே, தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கட்சி, பேதமின்றி மக்களின் நலனைக்கருத்திற் கொண்டு ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

காலத்தை இழுத்தடிக்காமல் புதிய அரசமைப்பு மூலம் தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பது தான் ஜனாதிபதியின் விருப்பம். அதனால் தான் ஒரு வருடத்துக்குள் தீர்வுக்கான பணிகள் நிறைவுபெற வேண்டும் என்ற கால வரையறையை ஜனாதிபதி விதித்துள்ளார் என்றார்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# “அரை நிர்வாண பக்கிரியின்” தேசத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் பிரிட்டனின் புதிய பிரதமர் ரிஷி சுனத்

இந்திய உபகண்டத்தை பிரித்தானியர் 195ஆண்டுகள் ஆட்சி செய்தனர். பிரித்தானியரின் ஆட்சிக்கெதிராக இமயம் முதல் குமரி வரை பல உணர்வு பூர்வமான சுதந்திர போராட்டங்கள் வெடித்து வீர பாண்டிய கட்டப்பொம்மன் உட்பட மகாத்மா காந்தி வரை பலரும் இந்திய சுதந்திர போராட்டத்தில் ஈடு பட்டனர். இறுதியாக இந்தியசுதந்திர போராட்டத்தை சாத்வீக வழியில் வெற்றி காண்பதில் மகாத்மா காந்தி முன்னெடுத்த முயற்சி வெற்றியளித்தது.

கத்தியின்றி இரத்தமின்றி பிரிட்டனின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்திருந்தார் மகாத்மா காந்தி.

இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் தமது தாயகத்தின் தனித்துவத்தை உச்சி முதல் உள்ளங்கால் வரை முதன்மைப்படுத்தி தமது நேர்மையான சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தினார் மகாத்மா காந்தி அடிகள்.

இங்கிலாந்தில சட்டக் கல்வியைப் பயின்று பாரிஸ்டராக பட்டம் பெற்ற காந்தியடிகள் இந்திய சுதந்திர போராட்டத்தின் போது பிரிட்டிஷாருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியதோடு அவர்களது ஆளுமையின் சின்னமாக இருந்த வெஸ்ட் மின்ஸ்டர் பாராளுமன்றினுள் சென்றே இந்தியர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தினார் மகாத்மா காந்தியடிகள்.

1931-ம் ஆண்டு இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் பிரித்தானியாவில் இடம் பெற்ற வட்ட மேசை மகாநாட்டுக்கு மகாத்மா காந்தி இந்திய சுதேசிகளின் ஆடையில் ‘கொடுக்கு’கட்டியவராக சென்றிருந்தார்.

அச்சமயத்தில் பிரித்தானிய பிரதமராக இருந்த வின்ஸ்டன் செர்ச்சில் காந்தியை நோக்கி ‘அரை நிர்வாண பக்கிரி’ என்று கேலி செய்தார். ஆனால் காந்தி அதனை தமக்குரிய ஒரு பாராட்டாகவே கருதுவதாக வின்ஸ்டன் சேர்ச்சிலிடம் கூறினார்.

இச் சம்பவம் இடம்பெற்ற போது இந்தியாவை பூர்வீகமாக கொண்ட இன்றைய பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக்கின் தந்தையார் கூட இந்தியாவில் பிறந்திருப்பாரோ என்பது சந்தேகமே.

கொண்ட கமலா ஹரிஸ் உபஅதிபராக இருக்கின்றார். போர்த்துக்கல், மொரிஷியஸ் நாடுகளின் பிரதமர்கள் கூட இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள்.

கடந்த நூற்றாண்டுகளில் ‘திரை கடல் ஓடி திரவியம் தேடு’ என்ற முது மொழிக்கமைவாக இந்தியர்கள் குடியேறாத நாடுகளே இல்லை என்று கூறுமளவுக்கு உலகின் பல்வேறு நாடுகளிலும் அவர்கள் குடியேறியிருந்தனர்.

வாணிபம், கல்வி என்பவற்றை முதன்மைப்படுத்தியே அவர்களது வெளிநாட்டு குடியேற்றங்கள் அமைந்திருந்தன. இவ்வகையில் கிழக்கு ஆபிரிக்காவின் கென்யா நாட்டில் குடியேறிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த குடும்பத்தைச் சேரந்தவரே பிரித்தானிய புதிய பிரதமர் ரிஷி சுனக். கென்யாவிலிருந்து பின்னர் பிரிட்டனில் சென்று குடியேறினர் பிரதமர் ரிஷி சுனக்கின் குடும்பத்தினர்.

அவரது இளமைக் காலம் சவால்கள் நிறைந்ததாகவே இருந்தது. 1980ஆம் ஆண்டு இங்கிலாந்தின் சௌதாம்ப்டன் என்ற இடத்தில் பிறந்த ரிஷி சுனக் 42 வயதானவர். அத்துடன் இங்கிலாந்தின் வயதில் குறைந்த கன்சர்வேட்டிவ் கட்சி தலைவராகவும் பிரதமராகவும் ரிஷி சுனக் தெரிவாகியுள்ளார்.

பிரித்தரியாவில் வாழ்கின்ற ஆசிய நாட்டவர்கள் குறிப்பாக இந்திய இலங்கை மற்றும் பாகிஸ்தானியர்கள் தமது பிள்ளைகளை சிறுவயதிலிருந்தே கல்வியில் நாட்டமுடையவரகளாக வளர்த்து வருகின்றனர்.

மாக பிரித்தானியா மிகவும் முடங்கியிருந்தது. இத்தகைய தருணத்திலேயே நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பும் பொறுப்பை பிரதமர் ரிஷி சுனக் ஏற்றுள்ளார்.

பெரும் செல்வந்தரான இந்தியாவின் இன்போசிஸ் நிறுவன ஸ்தாபகர் என் . ஆர். நாராயணமூர்த்தி ஏறத்தாழ 4.5.பில்லியன் டொலர்கள் பெறுமான



முள்ள பணக்காரர். அவரது புதல்வியான அக்ஷதா மூர்த்தியை அமெரிக்காவில் கல்வி பயின்ற போது காதலித்து மணந்தார் ரிஷி சுனக்.

இரு பெண் பிள்ளைகளுக்கு தந்தையாரான ரிஷிசுனக் தமது மாணவப் பருவத்தில் தமது சம்பாத்தியத்துக்காக

களிலிருந்து எவ்வளவு தூரம் தம்மை மாற்றியமைத்துள்ளனர் என்பதையே அறிய முடிகின்றது.

ஜனநயக நடைமுறைகள் பிரித்தானியாவில் மிக ஆழமாக வேரூன்றியுள்ளதையும் அடிப்படை மனிதஉரிமைகளுக்கு ஆங்கிலேயர்கள் மதிப்பளிப்பதையுமே பிரதமர் ரிஷி சுனக்கின் தெரிவு வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

தமது எதிர்காலப் பணிகளில் பிரித்தானியாவின் பொருளாதாரத்தை மீளமைப்பது மற்றும் சர்வதேச உறவுகளை மேம்படுத்துவது உட்பட உக்ரெயின் பிரச்சினையை தீரப்பது போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று பிரதமர் ரிஷி சுனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வகையில் கல்வியில் சிறந்து விளங்கிய ரிஷிசுனக் பின்னர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டதாரியாகவும், ஸ்டார்ன்போர்ட்

பிரித்தானியாவிலுள்ள ஒரு உணவகத்தில் உணவு பரிமாறும் தொழிலை மேற்கொண்டார். இதன் பின்னர் வங்கியியல் துறையில் பிரவேசித்து அரசியலிலும் ஈடுபாடு கொண்டார்.

பிரித்தானியா உலகில் காலனித்துவ ஆட்சியை மேற்கொண்ட நாடுகளைச் சேர்ந்த இன்றைய சந்ததியினர் தற்போது பிரித்தானியாவில் ஏராளமாகவே குடியேறி வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் இந்தியர்கள் மேற்கிந்தியர்கள், பாகிஸ்தானியர்கள் ஆகியோர் முக்கியமானவர்கள்.

லண்டன் மேயராக இருப்பவரும் பாகிஸ்தானைப் பூர்வீகமாக கொண்ட சாதீக்கான் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய பிரதமராக பிரித்தானியாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் தெரிவாகியுள்ளார் என்று பெருமையோடு குறிப்பிடுவதை விட இன்றைய சந்ததி பிரித்தானியர்கள் இன, மத, நிற வேறுபாடுகளை தூக்கிப்பிடித்த காலங்

புதிய பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் புதிய பிரித்தானிய அரசர் சார்ள்ஸ் முன்பாக பதவியேற்றுள்ளார். இருவருமே பிரித்தானிய அரசியலில் புதியவர்கள். ஒருவர் புதிய மன்னர். மற்றயவர் புதியபிரதமர் ரிஷி சுனக். தமது மூத்த புதல்வாரன இளவரசர் விலியத்தை விட ஒரு வயது மூத்தவரான ரிஷி சுனக்கிற்கு பிரதமர் பதவியை உத்தியோக பூர்வமாக வழங்கியுள்ளார் மன்னர் சார்ள்ஸ்.

பிரித்தானியாவில் பிரதமராக வந்தவர்களது வரலாறுகள் சுவராஸ்யமானவை. பலதரப்பட்ட குடும்பப் பின்னணிகளுடனும் அவர்கள் பிரித்தானிய பிரதமராகியிருந்தனர். ஆனால் பிரித்தானிய பிரதமர்களின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான இல :10 டவுணிங்வீதி இல்லத்தில் குடியேறப் போகும் முதலாவது ஆசிய இந்திய வம்சாவளிப் பிரதமர் மட்டுமல்ல. பிரித் தானியப் பிரதமர்களில் மிகப் பணப்பலம் கொண்ட செல்வந்த பிரதமரும் இவர் என்பது குறிப்பிடத் தக்கது.



எது ஏப்படியிருந்த போதிலும் வெள்ளை இன ஆதிக்கத்தோடு ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் பல்வேறு நாடுகளை ஆண்ட பிர்த்தானியாவில் தற்போதைய 21ஆம் நூற்றாண்டில் இந்தியாவை பூர்வீகமாகவும் மகாத்மா காந்தியின் மதமான இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கின்ற ரிஷி சுனக் பிரதமராகியுள்ளார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று உலக சகோதரத்துவத்தை எடுத்துரைத்தவரே பண்டைய தமிழ் புலவர்

கனியன் பூங்குன்றனார். இதற்கமைவாக இந்தியாவை ஆண்ட பிர்தானியாவில் பிரதமராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் மூலம் கனியன் பூங்குன்றனாரது தீரக்க தரிசனமான புலமையை நிதர்சனமாக்கியுள்ளார்

ரிஷி சுனக். பிரித்தானியாவில் மட்டுமல்ல. அமெரிக்காவிலும் இந்திய பூர்வீகத்தை

பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கல்வியல் முதுமாணிப்பட்டத்தையும் பெற்றார். ஒரு கணக்காளராகவும் பின்னர் வங்கியியல் துறையில் முக்கிய பதவிகளை வகித்து 2010ஆம் ஆண்டில் கன்சர்வேட்டிவ் கட்சியின் தீவிர செயற்பாட்டாளரானார் ரிஷி சுனக். 2015 ஆம் ஆண்டில் யோர்க்ஷயரிலுள்ள ரிச்மண்ட் தொகுதியிலிருந்து அதிக பெரும்பான்மையோடு பாராளுமன்றத்துக்கு தெரிவானார் ரிஷி சுனக். இதன் பின்னர் தொடர்ச்சியாக பாராளுமன்றில் தமது ஆளுமையை வெளிப்படுத்தி தற்போது பிரித்தானிய பிரதமராகியுள்ளார்.

பிரித்தானியாவின் நிதி அமைச்சராக 39 வயதில் நியமனமான ரிஷி சுனக் மூன்று வருடங்களில் தமது அதீத திறமை காரணமாக பிரதமராகியுள்ளார்.

பிரித்தானிய பொருளாதாரம் தற்சமயம் மிக மோசமான நிலையிலுள்ளது. கடந்த ஆண்டுகளில் கொவிட்வியாதி காரண


**Restaurant**

**வேலைக்கு ஆள் தேவை**

மார்க்கத்தில் அமைந்துள்ள இலங்கை இந்திய உணவகத்திற்கு இலங்கை இந்திய உணவுகளை தயாரிக்கக் கூடிய அனுபவமுள்ள Cook உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 647 545 2430
2291681 Ontario Ltd
Cansintraders@gmail.com

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

21 ஒக்டோபர் 2022 முதல் 28 ஒக்டோபர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா பேரின்பநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா பேரின்பநாதன் (லெப் கேணல் நாதன்) அவர்களது 26வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார். திரு நாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வே.இ.இராசையா அவர்கள்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களின் 11வது ஆண்டு நினைவு நாள் 27 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராசையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 02 நவம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35 வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நீலவேணி விசுவலிங்கம்

அனலைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி நீலவேணி விசுவலிங்கம் அவர்களின் 35வது ஆண்டு நினைவு நாள் 19 ஒக்டோபர் 2022 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நீலவேணி விசுவலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி யோகம்மா நல்லையா

சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ் விடமாவும் கொண்டிருந்த திருமதி யோகம்மா நல்லையா அவர் களது 31ம்நாள் (அந்தியேட்டி) நினைவு நாள் 25 ஒக்டோபர் 2022 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி யோகம்மா நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி




### திருமதி செபபாக்கியம் கிறிஸ்தோப்பர் இராஜரெத்தினம்

யாழ்.ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செபபாக்கியம் கிறிஸ்தோப்பர் இராஜரெத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 24 ஒக்டோபர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி செபபாக்கியம் கிறிஸ்தோப்பர் இராஜரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




22 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி துஷியந்தன் இந்துகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜொனவின் துஷியந்தனின் 41வது நாள் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஜொனவின் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





22 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு செல்வரெத்தினம் சுந்தரலிங்கம் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.




22 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுன் றோட்டை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சதாசிவம் சண்முகம் அவர்களது 42வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.





23 ஒக் 2022 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுன் றோட்டை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அமராவதி சண்முகம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.




18 ஒக் 2022 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சற்குணராணி தனபாலசிங்கம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 23 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.




24 ஒக்டோபர் 2022 திங்கட்கிழமை யாழ்.ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி செபபாக்கியம் கிறிஸ்தோப்பர் இராஜரெத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.




24 ஒக்டோபர் 2022 திங்கட்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.




25 ஒக்டோபர் 2022 செவ்வாய்க்கிழமை அனலைதீவு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு பழனி கனகசபை திருமதி நாகம்மா கனகசபை இணையர்களது நினைவு நாளாகும். அன்றையதினம் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.





25 ஒக்டோபர் 2022 செவ்வாய்க்கிழமை சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி யோகம்மா நல்லையா அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.




25 ஒக்டோபர் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மயூரனின் 30வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் மயூரன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




26 ஒக்டோபர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ராஜ்குமார் சுமதி இணையரின் செல்வப்புதல்வன் சாயிப்பிருந்தன் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் சாயிப்பிருந்தன் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




26 ஒக்டோபர் 2022 புதன்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பேரின்பநாதன் கந்தையா (லெப் கேணல் நாதன்) அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.




27 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை திவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.




28 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் சிவஹீ சிவா குருக்கள் சகானா இணையரது இரண்டாவது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இஅிணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




20 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கஜேந்திரன் சிவாஜா தம்பதிகளின் செல்வப்புதல்வன் உருத்திரன் றோய் கஜேந்திரனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் உருத்திரன் றோய் கஜேந்திரன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.


## At Need Funeral Arrangements
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## Pre-Arranging: A Wise Choice...

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

உ சிவமயம்



# ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

19 PENN DR, NORTH YORK, ON M9L 2A6. 416 744 9568
www.ttmtemple.com - Email: info@ttmtemple.com

## கந்தஷஷ்டி பெருவிழா விஞ்ஞாபனம்
## 25-10-2022 முதல் 01-11-2022 வரை

நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் ஐப்பசித்திங்கள் 8ம் நாள் (25.10.2022) செவ்வாயக்கிழமை சுக்லபட்ச பிரதமை முதல் ஐப்பசித் திங்கள் 14ம் நாள் (01.11.2022) செவ்வாயக்கிழமை வரை கந்தஷஷ்டிப் பெருவிழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பக்தர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு திருச்செந்தூர் முருகனின் திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| 25-10-2022 | செவ்வாய் | | கந்தஷஷ்டி ஆரம்பம். |
| 29-10-2022 | சனி | காலை | சத்ரு சங்கார ஹோமம். |
| 29-10-2022 | சனி | மாலை | சண்முகார்ச்சனை - வேல் வாங்கும் விழா. |
| 30-10-2022 | ஞாயிறு | மாலை | சூரசம்ஹாரம் |
| 31-10-2022 | திங்கள் | காலை | பாறணை (விரத பூர்த்தி) |
| 31-10-2022 | திங்கள் | மாலை | திருக்கல்யாணம் |
| 01-11-2022 | செவ்வாய் | | வைரவர் மடை |

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை | 9:00 மணிக்கு:- | ஆலயபூஜை |
| | 9:30 மணிக்கு:- | கும்பபூஜை, ஹோமம் |
| | 10:00 மணிக்கு:- | அபிஷேகம் |
| | 11:00 மணிக்கு:- | விஷேடபூஜை, சத்ருசம்ஹார திரிசதி அர்ச்சனை |
| நண்பகல் | 12:00 மணிக்கு:- | வசந்தமண்டபபூஜை, சுவாமி உள்வீதி வலம் வருதல்,அன்னதானம் |
| மாலை | 5:00 மணிக்கு:- | கும்பபூஜை, ஹோமம் |
| | 6:00 மணிக்கு:- | அபிஷேகம் |
| | 7:00 மணிக்கு:- | விஷேடபூஜை, சத்ருசம்ஹார திரிசதி நாமார்ச்சனை |
| இரவு | 8:00 மணிக்கு:- | வசந்தமண்டபபூஜை, சுவாமி வீதி வலம்வருதல், |

கந்தஷஷ்டி பெருவிழாவை முன்னிட்டு ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலய சூரசங்காரம் பிற்பகல் 3 .00 மணிக்கு சங்கல்பத்தை தொடர்ந்து ஆரம்பித்து சரியாக மாலை 5.00 மணிக்கு சூரசங்கார நிகழ்வு வழமைபோல் வெகுவிமரிசையாக நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

கந்தஷஷ்டி விரதம் இருக்கும் பக்தர்கள், பால்குடம் எடுக்க விரும்பும் பக்தர்கள் மற்றும் சத்ரு சம்ஹார ஹோமத்தில் கலந்து கொள்ள விரும்பும் பக்தர்கள் அனைவரும் தங்கள் பெயர் நட்சத்திரங்களை ஆலய காரியாலயத்தில் பதிவு செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.




# 7வது பிறந்த நன்நாள் வாழ்த்து



## Denen Eshwath Shankar

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் **Denen Eshwath Shankar** (டெனன்) இன் ஏழாவது பிறந்த நன்நாள் 31 ஒக்டோபர் 2022 திங்கட் கிழமையாகும். அன்றையதினம் பிறந்த நன்நாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடும் செல்வன் **Denen Eshwath Shankar** அன்றையதினம் புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழவுள்ளார்.

அகவை ஏழ காணும் செல்வன் **Denen Eshwath Shankar** பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள் உறவுகள் நண்பர்களுடன் இணைந்து ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் அன்பு இல்லக் குழந்தைகளும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!



# வரியைக் கட்டு! அல்லது வரிசையில் நில்!

கொழும்பில் உள்ள முன்னணி ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றின் ஊடகவியலாளர் என்னிடம் கேட்டார். யாழ்ப்பாணத்தில் ஓட்டோ மாபியாக்களை யார் கட்டுப்படுத்துவது?''என்று. அண்மையில் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்த பொழுது சிறிய தூரத்துக்கு அதிக தொகை பணத்தை அவர்கள் கேட்டதாகவும் அவர் முறையிட்டார். ஆனால் கொழும்பில் குறுந்தூரங்களுக்கு ஆகக் குறைந்தது 120 ரூபாய்களும், அதற்கு மேற்பட்ட தூரங்களுக்கு மீற்றர் கணக்கின்படி காசு அளவிடப்படுவதாகவும் அவர் சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டிகளில் ஏன் மீற்றரைப் பொருத்தக் கூடாது? என்றும் கேட்டார். அது மட்டுமல்ல பிக்மி போன்ற நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திற்கு வர முயற்சித்த போதும் அதனை முச்சக்கர வண்டி ஓட்டுநர் சங்கம் போன்றன வரவேற்கவில்லை என்ற ஒரு தகவல் தனக்குக் கிடைத்ததாகவும் அவர் சொன்னார். பிக்மி போன்ற நிறுவனங்களை யாழ்ப்பாணத்துக்குள் அனுமதித்தால் அது மக்களின் பயணச்சுமையை குறைக்கும் அல்லவா? என்றும் கேட்டார்.

அவர் கூறுவதில் உண்மை உண்டு. திருநெல்வேலியில் இருந்து யாழ் நகரப் பகுதிக்கு செல்வதற்கு முன்பு முகம் தெரிந்த ஓட்டக்காரர்கள் 200 ரூபாயும் முகம் தெரியாதவர்கள் 250 ரூபாயும் எடுத்தார்கள். ஆனால் இப்பொழுது 600 ரூபாய்க்கு மேல் கேட்கிறார்கள். பெட்ரோல் விலை இறங்கி விட்டது ஏன் கட்டணத்தைக் குறைக்க கூடாது? என்று கேட்டால் பெட்ரோல் விலை மட்டும் தானே இறங்கியிருக்கிறது? ஏனைய பொருட்களின் விலை இறங்கவில்லையே என்று கூறுகிறார்கள்.

சடுதியாக குறைந்தது. ஆனால் செய்திகளில் பொருட்களின் விலைகள் குறைக்கப்படுமளவுக்கு நடைமுறையில் விலைகளைக் குறைப்பதற்கு வியாபாரிகள் தயாரில்லை.இலங்கை போன்ற நாடுகளில் ஏறிய விலைகள் பொதுவாக இறங்குவது குறைவு என்று பொருளியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அதை அவர்கள் கீழ் நோக்கிய இறுக்கம் என்று வர்ணிக்கிறார்கள்.




ரணில் விக்கிரமசிங்க ஒருபுறம் விலைகளைப் படிப்படியாகக் குறைக்கிறார். இன்னொருபுறம் வரிகளை கூட்டத் தொடங்கியிருக்கிறார். அது மட்டுமல்ல, புதிதாக வரிகளையும் விதிக்க தொடங்கி

காரணமாக நாடு அதன் முதலீட்டு தகுதியை இழந்து விட்டது. 2009க்கு பின்னரும் அந்த தகுதியை மீளப் பெற முடியவில்லை. ஏனென்றால் அந்த யுத்த வெற்றி நியாயமான வழிகளில் பெறப்படவில்லை. அது நாட்டின் ஒரு பகுதி மக்களை பூச்சி புழுக்களைப் போல கொன்றொழித்துப் பெறப்பட்ட ஒரு வெற்றி. தமிழ்மக்கள் குற்றம் சாட்டுவது போல இனப்படுகொலை மூலம் பெறப்பட்ட ஒரு வெற்றி.எனவே இனப்படு

கொலையை அரசியல் வெற்றியாக மாற்ற முடியவில்லை.அதன் விளைவாகத்தான் தமிழர்கள் நீதி கேட்டு உலக சமூகத்தின் கதவுகளைத் தட்டத் தொடங்கினார்கள். அதுவும் நாட்டின் முதலீட்டுக்

சிறிய ஆனால் கவர்ச்சியான செமி கொஸ்மோபொலிற்றன் நகரமாகிய யாழ்ப்பாணம் புலப்பெயர்ச்சி காரணமாகவும் இடப்பெயர்ச்சி காரணமாகவும் அதன் சனப்பொலிவை இழந்து விட்டாலும் கூட, இப்பொழுதும் அதன் தெருக்களில் ஜனங்கள் நிறைந்து வழிந்து கொண்டே இருக்கிறார்கள். இதனால் முச்சக்கர வண்டிகளுக்கான தேவை அதிகம் உண்டு. ஆனால் முச்சக்கர வண்டிக் காரர்கள் பெட்ரோல் விலை உயரும் பொழுது உயர்த்திய கட்டணத்தை இறக்கத் தயாரில்லை. யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர் ஒருவரும் சொன்னார்,

அண்மையில் தான் கொழும்புக்குச் சென்ற பொழுது அங்கே ஒரு குறுந்தூர ஓட்டோப் பயணத்தின் பின் எவ்வளவு கட்டணம் என்று கேட்டபொழுது அந்த ஓட்டோச் சாரதி தன்னிடம் 100 ரூபாய் கேட்டார் என்றும், தனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது என்றும். தலைநகரில் ஓட்டோக் கட்டணங்கள் குறையத் தொடங்கி விட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஏன் குறையவில்லை? யார் அதைக் குறையவிடாமல் தடுப்பது? பிக்மி போன்ற சேவைகளை யாப்பானத்துக்கு வரவிடாமல் தடுப்பது யார்? ஓட்டோ உரிமையாளர்கள் மீற்றர் பூட்ட மறுப்பது ஏன்? அதைத் தட்டிக் கேட்பது யார்?

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளை ஒப்பிட்டுளவில் கட்டுப்படுத்தி வருகிறார். குறிப்பாக எரிபொருள், எரிவாயு விநியோகம் ஒப்பிட்டுளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது. மண்ணெண்ணெய் வினியோகமும் ஒப்பிட்டளவில் சீராகி வருகிறது. அதனால் கடல் படு திரவியங்களின் விலை படிப்படியாக இறங்கி வருகிறது. கோழி இறைச்சியின் விலை அண்மையில்

யிருக்கிறார். வரிசைகளில் நிற்பதை தடுப்பதென்றால் வரிகளைக் கட்டுங்கள் என்று அவர் அண்மையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது கூறினார். மேலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு அடிப்படைக் காரணம் 2019–ல் ராஜபக்சக்கள் செய்த வரிக்குறைப்பே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். வரியைக் குறைத்தபடியால் நாட்டின் வருமானம் குறைந்தது தான் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று கூறும் அவர் அதனால் புதிய வரிகளை விதிக்க வேண்டியிருக்கிறது என்றும் கூறுகிறார்.

2019இல் கோட்டாபய ஆட்சி பொறுப்பை ஏற்றதும் வரிகளை குறைத்தமைதான் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று ரணில் விக்கிரமசிங்க மட்டும் கூறவில்லை. ஏற்கனவே பொருளியல் நிபுணர்கள் அதைக் கூறிவருகிறார்கள். மிகக்குறிப்பாக கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூ ட் எனப்படும் நிறுவனம் இதுதொடர்பில் தொடர்ச்சியாகக் கருத்து தெரிவித்து வருகிறது.

வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூ ட் கூறுவது உண்மைதான். ஆனால் அது ஒரு பகுதி உண்மை மட்டுமே. வரிக் குறைப்பை ராஜபக்சக்கள் ஏழைகளுக்காக செய்யவில்லை. அதையவர்கள் பணக் காரர்களைத் திருப்திப்படுத்தவே செய்தார்கள் என்பது முதலாவது விடயம். இரண்டாவது விடயம், வரிக் குறைப்பு மட்டும் தான் பொருளாதார நெருக்கடியை தோற்றுவித்தது என்பது முழுமையான விளக்கம் அல்ல. வரிக் குறைப்பு பல காரணங்களில் ஒன்று என்பதே சரி.

பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் இனப்பிரச்சினைதான். இனப்பிரச்சினை

கவர்ச்சியை குறைத்து விட்டது. 2009க்கு பின்னரும் முதலீட்டாளர்கள் நாட்டை நோக்கி வரத் தயங்குகிறார்கள். எனவே இனப் பிரச்சினைதான் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம். வரிக் குறைப்பு,ஈஸ்டர் குண்டு வெடிப்பு,பெருந் தொற்று நோய்,உக்ரைன் யுத்தம் போன்றன உப காரணங்கள் தான். நாட்டின் பொதுத்துறை ஊதியத்தில் சுமார் 50மூபடைத்தரப்புக்கு வழங்கப்படுகிறது என்றும், உலகில் 100 பேர்களுக்கு எத்தனை படைவீரர்கள் என்ற விகிதத்தில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது என்றும் நிஷான் டி மெல்–வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்டின் பணிப்பாளர்– கூறுகிறார். இலங்கைத் தீவின் பாதுகாப்பு செலவினம் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரச் செலவினங்கள் இரண்டையும் கூட்டிவரும் தொகையைவிட அதிகமாக இருப்பதும் பொருளாதார சீரழிவுக்கு ஒரு காரணம் என்று நிஷான் கூறுகிறார்.

எனினும், ரணில் விக்ரமசிங்கவின் வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்படவில்லை.மாறாக ராஜபக்சவின் வரிக்குறைப்பை ஒரு பிரதான காரணமாகக் காட்டி அதன்மூலம் அவர் புதிதாக வரிகளை நியாயப்படுத்த முயல்கிறார்.அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் நடுத்தர வர்க்கம், கீழ் நடுத்தர வர்க்கத்தின் மடியில் அவர் கைவைக்கப் போகின்றார். ஏனென்றால் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர் இயங்க வேண்டியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதும் ஐ.எம்.எப்.ஐத் திருப்திப்படுத்தும்.

2019 இல் நடந்த வரிக்குறைப்பு தொடர்பாக நிசான் டி மெல் ஒரு விடயத்தை கடந்த ஒகஸ்ட் மாதம் சுட்டிக்காட்டியிருந்தார். அந்த வரிக்குறைப்பு உரிய ஆய்வுகளின் பின் முன்னெடுக்கப்படவில்லை. இனிமேலும் வரியை கூட்டும் பொழுது அதற்குரிய ஆய்வுகள் செய்யப்படா விட்டால் ஏற்கனவே விட்ட தவறை திரும்பவும் விடுவதாக அது அமையும் என்று அவர் எச்சரித்திருந்தார்.

புதிய வரிகளின்மூலம் ரணில் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளை மேலோட்டமாகத் தணிக்கக்கூடும். நெருக்கடியின் மூலகாரணத்தை நீக்க



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

அவரால் முடியாது. ஏனென்றால் அவர் தாமரை மொட்டின் கைதியாக காணப்படும் ஒரு ஜனாதிபதி. அடுத்த மார்ச் மாதமளவில் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அவருக்கு கிடைத்து விடும். அப்பொழுது அவர் தாமரை மொட்டுக்கட்சியில் தங்கியிருப்பதில் இருந்து ஒப்பீட்டளவில் விடுபடலாம். ஆனாலும் தனது சொந்தக் கட்சியை அவர் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அவர் ஒற்றை யானையாக நாடாளுமன்றத்தில் நிற்கிறார். சஜித்தை உடைத்து யானைகளை தன் வசப்படுத்த வேண்டும். அதற்கு கிடைத்திருக்கும் அரை ஆட்சிக்காலம் போதுமா? எனவே இனப் பிரச்சினையை தீர்ப்பது என்றெல்லாம் அவர் ரிஸ்க் எடுப்பாரா என்பது சந்தேகம் தான்.

முன்னாள் சமாதானத் தூதுவரான எரிச் சூல் ஹெய்ம்மை அவர் நாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார். சூல் ஹெய்ம் ஜனாதிபதிக்குரிய காலநிலை ஆலோசகர் என்று கூறப்பட்டாலும், ஐ.எம்.எப்ஐ திருப்திப்படுத்த அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்க்க முயற்சிப்பது போன்ற ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப திட்டமிடுகிறதா என்ற சந்தேகங்களும் உண்டு.

சூல் ஹெய்ம் கொழும்புக்கு வந்த காலகட்டத்தில் தனது ருவிற்றர் பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டிருந்தார் மிக விரைவான வழி எப்பொழுதும் நேரான கோடாக இருப்பதில்லை அதில் அவர் பிரசுரித்துள்ள சிறு காணொளியின்படி வளைந்த கோடே விரைவானது என்று காட்டப்படுகிறது. அந்த வளைந்த பாதை எது?

ரணில் விக்கிரமசிங்கவிற்கு இது ஏறக்குறைய கடைசி ஓவர். மிஞ்சிப் போனால் இன்னுமொரு ஓவர் இருக்கலாம். அவருக்கு வயதாகிவிட்டது. தன்னுடைய கடைசிக் காலத்தில் முழு நாட்டையும் பலப்படுத்துவதா? அல்லது தனது சொந்தக் கட்சியான யு.என்.பியை பலப்படுத்துவதா? என்று அவர் முடிவெடுக்க வேண்டும்.அவர் பதவியேற்ற அறையின் பின்னணிச் சுவரில் மூன்று ஒளிப் படங்களைத் தொங்க விட்டிருந்தார். டி.எஸ். சேனநாயக, டட்லி சேனநாயக, ஜெயவர்த்தன ஆகிய மூவரின் ஒளிபடங்களுமே அவை. இதன் மூலம் அவர் என்ன கூற வருகிறார்? அவருடைய அண்மைக்கால நடவடிக்கைகளில் அவர் பெருமளவுக்கு ஜெயவர்த்தனாவை பின்பற்றுவது போல தோன்றுகிறார்.

எனவே அவருக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் தான் உண்டு. முதலாவது தெரிவு அன்ரன் பாலசிங்கத்தை தீர்க்கதரிசி என்று நிரூபிப்பது.

இரண்டாவது தெரிவு தான் ஒரு தீர்க்கதரிசி என்று நிரூபிப்பது. அன்ரன் பாலசிங்கத்தை தீர்க்கதரிசியாக நிரூபிப்பது என்றால் ஜெயவர்த்தனவின் வழியில் தொடர்ந்து போக வேண்டும். யூ .என்.பியைப் பலப்படுத்த வேண்டும். அல்லது, தன்னுடைய கடைசி ஓவரை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து, நாட்டின் சமாதானத்துக்கு அர்ப்பணித்து உழைப்பாராக இருந்தால், அதற்காக சிங்கள பௌத்த பெருந்தேசியவாதக் கட்டமைப்பை எதிர்த்து ரிஸ்க் எடுப்பாராக இருந்தால் நாடு அவரை ஒரு தீர்க்கதரிசி என்று போற்றும். இல்லையென்றால் நரி என்று தூற்றும்.

# சீன இரும்புத் திரையால் மறைக்கப்படும் திபெத்:

## “திபெத்” சுதந்திர வாசல் திறக்குமா? தலாய்லாமா அகிம்சை வழி வெல்லுமா??

- ஜங்கரன் விக்கினேஸ்வரா

சீனாவின் நீண்ட கால அடக்கு முறைகளுக்கு எதிராகவும், திபெத் ஒரு தனி சுதந்திர நாடு என்று கூறி திபெத்தியர்களின் போராட்டம் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. பௌத்த மதம் தழைத்தோங்கி இருக்கும் திபெத்தில், கடந்த 70 ஆண்டுகளாக சீனாவுக்கு எதிராக தங்களது போராட்டத்தை திபெத்தியர்கள் முன்னெடுத்து வருகிறார்கள்.




**திபெத் தனி நாடா ?**

1950-ஆம் ஆண்டு காலகட்டத்திலிருந்து இந்தப் போராட்டம் இன்று வரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. திபெத் தனி நாடா அல்லது சீனாவின் ஒரு பகுதியா இப்படிக் கேள்வி எழுப்பும் மனநிலைக்கு திபெத்திய மக்கள் வந்துவிட்டார்கள். இந்த நீண்ட நெடிய போராட்டத்தின் உண்மை முகம் உலகறிந்த விடயமாகும்.

திபெத் ஏறத்தாழ 4,900 மீட்டர் (16,000 அடி) ஏற்றம் கொண்ட இந்தப் பகுதி, உலகின் மிக உயரத்தில் அமைந்தது என்பதால் இதனை "உலகத்தின் கூரை" என்றும் பொதுவாக குறிப்பிடுவார்கள்.

சீனாவில் உள்ள 5 தன்னாட்சி பிரதேசங்களில் திபெத் தன்னாட்சி பிரதேசமும் ஒன்றாகும். எல்லை கோட்டின் மொத்த நீளம் சுமார் 4000 கிலோமீட்டராகும். முழு நிலபரப்பு 12 இலட்சத்து 20 ஆயிரம் சதுர கிலோமீட்டராகும். சீனாவின் மொத்த நிலபரப்பில் திபெத் 12.8 வீதமாகும்.

7-ஆம் நூற்றாண்டில் தனி சாம்ராஜ்யமாக இருந்த திபெத், பின்னாளில் கிழக்கு ஆசியாவை ஆண்ட குயிங் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாக மாறியது. இந்தப் பேரரசின் ஆளுகையில் இருந்தபோதுதான் திபெத்தின் ஆட்சிக்கு துணை புரிய தலாய்லாமாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.




இப்படி காலம் காலமாக தலாய்லாமாக்கள் ஆண்டுவந்த திபெத் பகுதி, குயிங் வம்சத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு 1913-ஆம் ஆண்டு சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. முறையான அரசு அமைப்புடன், தலாய் லாமா நிர்வாகத்தின் கீழ் இருந்த திபெத்தை, 1950-ஆம் ஆண்டு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது சீனத்து செம்படை. அந்த நேரத்தில் பதின்ம பருவத்திலிருந்த தற்போதைய தலாய்லாமா இந்தச் சூழலை சரியாகக் கையாள முடியாத நிலையில் தவித்தார்.

**சுதந்திர நாடு போராட்டம்**

17 அம்சங்கள் கொண்ட உடன்படிக்கை ஒன்றை 1951-இல் திபெத் அரசுடன் சீனப் படை மேற்கொண்டது. அதன்படி திபெத்தில் கட்டுப்பாடுகளற்ற அதிகாரத்தை சீனப் படை பெற்றது. திபெத்தின் பிரபுக்களும், பாட்டாளிகளும் சீனப் படைக்கு ஒத்துழைத்தாலும், நிலச் சீர்திருத்தங்களாலும், புத்த மதம் தொடர்பான சண்டைகளாலும் பல வன்முறைகள் வெடித்தன.

இதனால் தூண்டப்பட்ட மக்கள் 1959, மார்ச் 10-ஆம் தேதியன்று தலாய்லாமா வசிக்கும் லாஸ் வீட்டின் அருகே ஒன்று கூடினர். நாட்டை விட்டு தலாய்லாமா தப்பிக்க வழி செய்து சீனப் படைகளை எதிர்த்து கடுமையான சண்டையில் ஈடுபட்டனர்.

**தலாய்லாமா தப்பித்து இந்தியா வருகை:**

இந்தச் சண்டையை சீன ராணுவம் தனது அசாத்திய படைபலத்தால் அடக்கினாலும், தலாய் லாமா தப்பித்து இந்தியா வருவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. அதற்கான மிக முக்கிய காரணம், திபெத் மக்கள் தங்கள் ஆன்மீக தலைவரைத் தப்பிக்க வைக்க மேற்கொண்ட முயற்சிகளே.

1959-ஆம் ஆண்டு மார்ச் 30-இல் இந்தியாவுக்கு தலாய்லாமா வந்தார். அதன் பிறகு இந்தியாவிலிருந்தபடியே அவர் திபெத்தின் நாடு கடந்த அரசை நிர்வகித்து வருகிறார். ஆனால், திபெத் தனி நாடு இல்லை எனவும், தங்களுடைய நாட்டின் ஒரு பகுதிதான் எனவும் இன்றுவரை சீனா கூறி வருகிறது.

ஜூலை 6, 1935 இல் பிறந்த ஜெட்சன் ஜம்பேல் ஙவாங் லொப்சாங் யெஷே டென்சின் கியாட்சோ, திபெத்தின் 14வது தலாய் லாமா ஆவார். இவர் திபெத் மக்களின் பலம் மிகுந்த ஆன்மீக அரசியல் தலைவர் ஆவார்.

அத்துடன் தியானம் குறித்த பரிசோதனைக்கூட ஆராய்ச்சிகளிலும் தமது ஒத்துழைப்பை வழங்கியிருக்கிறார். இவர் 1989 ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசை பெற்றவர்.

ஆனால், திபெத்தியர்களோ சீனாவின் கட்டுப் பாட்டில் இருக்க முடியாது எனவும், திபெத் தனி நாடு தான் எனவும் கூறி சீனாவை எதிர்த்து வருகின்றனர். இதற்கான போராட்டம் இன்றளவும் திபெத்தில் தொடர்ந்துகொண்டு தான் இருக்கிறது.

சுதந்திர நாடாக அங்கீகரிக்க வேண்டுமெனவும், சீனாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டுமெனவும் திபெத் மக்கள் போராடி வருகின்றனர். மிக மோசமான படிப்பறிவு விகிதம், சுகாதாரமற்ற சூழல், ராணுவ அடக்கு முறைகள் எனப் பல இன்னல்களைச் சந்தித்துவரும் திபெத் பகுதிக்கு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்கூட சீன அரசின் அனுமதியில்லாமல் செல்ல முடியாது என்பதே அதன் இன்றைய நிலையாக உள்ளது.

**திபெத்தியர்களின் கிளர்ச்சி**

1951-இல் திபெத்தை சீன மக்கள் குடியரசுடன் இணைத்த பின்னர், திபெத் நாடானது, 1955-இல் சீனாவின் ஒரு நிர்வாகப் பகுதியாக மாற்றப்பட்டது. இதனை திபெத்திய மக்கள் ஏற்காது தொடர்ந்து அமைதியாக எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். திபெத்தை தனி நாடாக அறிவிக்க கோரி கிளர்ச்சிகளை தொடங்கினர்.

ஆனால் ஜெனரல் தான் குவான்சான் தலைமையிலான சீன இராணுவத்தினர் 23 மார்ச் 1959 அன்று சீனாவிற்கு திபெத்தியர்களின் கிளர்ச்சியை போரிட்டு ஒடுக்கினர். இந்த கிளர்ச்சியில் 2,000 திபெத்தியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 85 ஆயிரம் முதல் 87 ஆயிரம் திபெத்தியர்கள் காயமடைந்தனர்.

1959-ஆம் ஆண்டு சீனாவிற்கு எதிரான திபெத்தியர்கள் நடத்திய கிளர்ச்சியை நினைவு கூறும் வகையில், திபெத்தியர்கள் வாழும் உலக நாடுகளில் ஆண்டுதோறும் மார்ச், 10 நாளான்று திபெத்தியர்கள் எழுச்சி நாள் மற்றும் 12 மார்ச் அன்று திபெத்தியப் பெண்களின் எழுச்சி நாளாக கொண்டாடப்படுகிறது.

**விடியலுக்குக் காத்திருக்கும் திபெத்தியர்கள்!**

பத்திரிகையாளர்கள், வெளிநாட்டினர் என யாரும் எளிதில் செல்ல முடியாத அளவுக்கு தனது அதிகார அரணால் அந்தப் பகுதியை சீன அரசு தனிமைப்படுத்தப்பட்ட ரகசியமாகவே பாதுகாத்து வருகிறது.

சீனாவை எதிர்த்து லட்சக்கணக்கான திபெத் மக்கள் பல ஆண்டுகளாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். திபெத்தில் ஒரு தேசிய இனம் தன்னுடைய சொந்த மண்ணிலிருந்து மற்றொரு அண்டை நாட்டால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. தீராத மன வேதனையைத் தொடர்ந்து அவர்களுக்கு அளித்துக் கொண்டே இருக்கிறது. சீனாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள திபெத்திலிருந்து, கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் வெளியேறிக் கொண்டேயிருக்கிறார்கள்.

திபெத்தை தன் பகுதிக்கு உட்பட்டது என்று சீனா அறிவித்துக் கொண்டுவிட்ட நிலையில், தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரமாகவும், பண்பாட்டு ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒரு தேசிய இனமாக வாழ்ந்ததற்கான அடையாளங்களை வல்லரசான சீனாவுடன் திபெத்தியர்கள் மீட்டுப் பெற முடியுமா என்ற கேள்வி தொடர்கிறது.




சீன ஆக்கிரமிப்பை திபெத்தியர்கள் ஒரு போதும் விரும்பவில்லை. கடந்த 70 ஆண்டுகளில் சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட திபெத்தியர்களை சீன ராணுவம் படுகொலை செய்திருக்கிறது. சுமார் 6,000-க்கும் மேற்பட்ட பவுத்த மடாலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

உலகின் கூரையில் சொந்த மொழி, மதத்தைப் பின்பற்ற முடியாமல் அகதிகளைப் போன்று திபெத் மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் வேவு பார்க்கப்பட்டு, இன்றுவரை வேட்டையாடப்பட்டு வருகின்றனர். ஐ.நா. சபையோ, மேற்கத்திய நாடுகளோ சீனாவின் அத்துமீறல்களை கண்டிக்கவில்லை, தடுத்து நிறுத்தவில்லை. எப்படியாவது சீனாவிடம் இருந்து விடுதலை பெற வேண்டும் என்ற வேட்கை திபெத் மக்களிடம் கொழுந்துவிட்டு என்றும் எரிகிறது.

திபெத் மக்கள் தங்கள் பூர்வ குடிகளின் பண்பாட்டு அடையாளங்கள் அழிக்கப்படுவதன் மூலம், அந்த நாகரிகங்களும் அழிந்து விடுகின்றன.

இதை மீட்டெடுக்க முடியாத துன்பங்களிலிருந்து தங்களது அடையாளத்தை இழந்து வரும் மக்கள், தங்கள் வாழ்வாதாரத்துக்காக வேறு வழியின்றி வெவ்வேறு இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டேயிருக்கிறார்கள்.

இந்த நாடுகளில் மீதம் உள்ளோர் தங்கள் வாழ்க்கையைக் கரைத்துக் கொண்டும், சுதந்திரக் காற்று நம் பக்கம் வீசாதா என்று ஒரு விடியலுக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.



# தமிழரசுக்கட்சியின் எதிர்காலம்?

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் எப்படியிருக்கும்? இந்தக் கேள்வி இப்பொழுது பலமாக எழுந்துள்ளது. இதற்குச் சில காரணங்களுண்டு. அதனால் தமிழ் மக்களுக்கான நிகழ்கால எதிர்கால அரசியலை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லக் கூடிய கொள்கையும் திறனும் அர்ப்பணிப்பும் உண்டா? என்ற சந்தேகம் எழுந்துள்ளமையாகும். முன்பும் சரி, இப்பொழுதும் சரி தமிழரசுக் கட்சியினால் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் எதற்கும் தீர்வைக் காண முடிந்ததில்லை. (அப்படி ஏதாவது ஒரு விடயத்தில் அது தீர்வைக் கண்டிருந்தால் அதை யாரும் குறிப்பிடலாம்).

ஒரு நீண்டகால அரசியற் கட்சி என்ற வகையிலும் அதிகமான காலம் தமிழ் மக்களுடைய ஆதரவைப் பெற்றுள்ள கட்சி என்ற வகையிலும் ஆகக் குறைந்த பட்சம் மக்களுடன் நெருக்கமான உறவைப் பேணி, மக்களுடைய துயர் துடைப்பு, வாழ்க்கை மேம்பாட்டுப் பணிகளில் கூட அது செயற்படவில்லை.

மாறாக அது தன்னைத் தொடர்ந்தும் அரசியல் அரங்கில் பலமாக வைத்துக் கொள்வதற்கான உபாயங்களையே கொண்டிருக்கிறது. அதாவது, தலைவர்கள் வாழ்ந்து கொள்வதற்கான பொறிமுறையே அதனுடையது. அதற்கமைவாக அது தமிழ் மக்களை ஏனைய சமூகங்களோடு இணைய விடாமல் பார்த்துக் கொள்கிறது. எந்தத் தரப்பு ஆட்சிக்கு வந்தாலும்

அரசாங்கத்தோடு எப்போதும் எல்லாவற்றுக்கும் முரண்பட்டுக் கொண்டேயிருக்கிறது. ஐ.தே.க சார்பாகச் சில சந்தர்ப்பங்களில் செயற்பட்டாலும் அதனால் தலைவர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்கிறார்களே தவிர, மக்களுக்கு எந்த வகையான நன்மைகளும் கிட்டுவதில்லை. எளிய உதாரணம், ரணில் — மைத்திரி நல்லாட்சி காலத்தில் தமிழரசுக் கட்சி (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு) மிக நெருக்கமான உறவைப் பேணியது.

அதனால் தலைவர்கள் சிறப்புச் சலுகைகள் பலவற்றைப் பெற்றனர். பதிலாக மக்களுடைய எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. அந்தக் காலகட்டத்தில் அரசியற் கைதிகளை விடுவித்திருக்க முடியும். கல்முனை பிரதேச செயலகத்தை தனியாக உருவாக்கியிருக்கலாம். காணாமலாக்கப்பட்டோருடைய பிரச்சினைக்கான தீர்வைக் கண்டிருக்க முடியும்.

வடக்குக் கிழக்கில் பௌத்த விரிவாக்கத்தை நிறுத்திருக்க முடியும். அரசியற் தீர்வை நோக்கி நகர்ந்திருக்கலாம். அதற்குச் சாத்தியமான வகையில் அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டிக்கலாம். அதற்கான சர்வதேச அழுத்தம் கூட இருந்தது. போரிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு முறையான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். புலம் பெயர்ந்தோரின் முதலீடுகளை வடக்குக் கிழக்கில் ஏற்படுத்தியிருக்கலாம்.

வடக்கிலும் கிழக்கிலும் மக்களுடைய காணிகளில் நிலை கொண்டிருக்கும் படையினரை விலக்கியிருக்க முடியும். மாகாணசபைகளுக்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கலாம். முழுதாக இல்லாது விட்டாலும் நிதி,காணி விடயங்களில் சுயாதீனமாகச் செயற்படக் கூடிய நிலையை உருவாக்கியிருக்கலாம். இப்படி பல பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டிருக்க முடியும். இதில் ஒன்றைக் கூட தமிழரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) செய்யவில்லை. பதிலாக சுமந்திரன், சம்மந்தன், மாவை சேனாதிராஜா உள்ளிட்ட அனைவரும் அன்றைய அரசாங்கத்தில் செல்லப்பிள்ளைகளாகவே இருந்தனர்.

சிறிய அளவுக்குக் கூடப் பாதிக்கப்படும் மக்களைக் குறித்து இவர்கள் ஒரு போதுமே சிந்தித்ததில்லை. இதனால் தான் பெருமளவு தமிழர்கள் இன்று சலித்துப் போயிருக்கிறார்கள்.

குறிப்பாக இளைய தலைமுறையினர் வேறு வழியின்றி நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது வெளியேறுவதைப்பற்றிச் சிந்திக்கிறார்கள். இன்றைய பொருளாதார நெருக்கடிகளால் வெளியேற முற்படுவோரின் கதை வேறு. இது வேறு.

ஆகவே நமது மக்கள் சிதறி, உலகமெங்கும் அகதிகளாக்குவதற்கான அரசியலையே தமிழரசுக் கட்சி முன்னெடுத்து வருகிறது. ஆனால், இனரீதியாக ஒடுக்கப்படும் மக்கள் எந்த நிலையிலும் தங்கள் நிலத்தை விட்டுப் பெயர்ந்து செல்லக் கூடாது. அப்படிப் பெயர்ந்து செல்வது நிகழுமானால் அது அந்தச் சமூகத்தினுடைய தேசிய இருப்பையும் அடையாளத்தையும் அழித்து விடும். ஒரு சமூகத்தின் அல்லது ஒரு இனத்தின் தேசிய இருப்பென்பது அதனுடைய நிலம், அந்த நிலத்தில் வாழ்கின்ற வாழ்க்கை, அதனுடைய மொழி, பண்பாடு போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.




குறித்த நிலத்தை விட்டு குறித்த இனமோ சமூகமோ பெயர்ந்து செல்லுமாக இருந்தால் அதனுடைய மொழியும் பண்பாடும் சிதைந்து விடும். வாழ்க்கையே மாறி வேறொன்றாக ஆகி விடும். என்னதான் ஆயிரம் நியாயங்களைச் சொன்னாலும் புலம்பெயர்வு தேசிய அடையாளச் சிதைவிற்கு முக்கிய காரணமாகும். ஆகவே தான் எந்தச் சூழலிலும் சொந்த நிலத்திலேயே மக்களுடைய வாழ்க்கை நிகழ வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

சொந்த நிலத்தில் மக்கள் வாழ வேண்டுமாக இருந்தால் அதற்கான ஏது நிலைகள் இருக்க வேண்டும். அவரவர் ஊர்களில் அவரவர் வாழக் கூடிய தொழில் வாய்ப்புகள் கிட்ட வேண்டும். பிள்ளைகளுடைய கல்விக்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். முறையான ஆசிரிய வளம் தொடக்கம் பௌதீக வளங்கள் வரை சரியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மருத்துவமனைகளை அவற்றுக்குரிய வளங்களோடு சரியாக இயங்க வைக்க வேண்டும்.

தேவையான உட்கட்டுமான விருத்திகளைச் செய்ய வேண்டும். போக்குவரத்துத் தொடர்பாடல்களை மேம்படுத்த வேண்டும். அதாவது மக்களுடைய வாழ்க்கைக்கான அடிப்படைகளை வளப்படுத்த வேண்டும். இதை அபிவிருத்தி அரசியலினால் தான் முன்னெடுக்க முடியும். இதற்கு அரசாங்கத்துடன் ஏதோ ஒரு வகையில் இணக்கப்பாட்டை (**Negosiation**) கண்டேயாக வேண்டும். இதனுடைய அர்த்தம், அரசாங்கத்திடம் சரணடைவதோ அதனுள் கரைந்து போவதோ என்பதல்ல. இதற்குப் பொருத்தமான உபாயங்களை வகுத்துச் செயற்பட வேண்டும் என்பதேயாகும். அதாவது அரசியல் உரிமைக்கான முயற்சிகளையும் செயற்பாடுகளையும் விட்டு விடாமல், மக்களுடைய வாழ்வுரிமைகளை வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். இதில்தான் அரசியல் திறனும் நிபுணத்துவமும் தேவைப்படுகிறது. இதையே இலங்கையில் தமிழ் மக்களையும் விட சிறிய எண்ணிக்கையில் உள்ள முஸ்லிம்களும் மலைய மக்களும் செய்கின்றனர். (இப்பொழுதுள்ள மலையக, முஸ்லிம் தலைமைகள் ஏறக்குறைய தமிழரசுக் கட்சியைப் போல சுருங்கி, தமது நலனோடு நின்று விட்டன).

அப்படிச் செய்தே அவர்கள் ஓரளவுக்குத் தம்மை மேம்படுத்தியுள்ளனர். அவர்களுக்கும் அரசுடனும் சிங்கள அதிகார வர்க்கத்தோடும் முட்டி மோதல்களும் முரண்களும் உண்டு. நெருக்குவாரங்கள் உண்டு. ஆனாலும் அவர்களுடைய வளர்ச்சி வேகமும் வளர்ச்சி வீதமும் அதிகமே. ஆனால், தமிழரசுக் கட்சியினதும் அதை ஒத்த தரப்புகளுடையதும் அரசியல் இதற்கு மாறாகவே உள்ளது. இவற்றின் வழிமுறைகள் தமிழ் மக்களுடைய தேசிய இருப்பை அழிக்கும் விதமாகவே உள்ளது. தமிழ்த்தேசியத்தைப் பாதுகாக்கிறோம் என்ற பேரில் அதைச் சிதைப்பதாகவே தொடர்கிறது. பேரளவில் மட்டுமே தேசிய அடையாளம் உள்ளது. நடைமுறையில் இல்லை.

இதற்குக் காரணம், தானொரு அரசியற் தரப்பு என்பதை மறந்து, ஊடகச் செயற்பாட்டு அமைப்பைப் போலப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவது மட்டுமே அதனுடைய வழிமுறையாக இருப்பதாகும். பாராளுமன்றத்திலும் ஊடக வெளியிலும் பேசினால் மட்டும் போதும் என்று கருதுகின்றனர். இதையே கடந்த நாற்பது ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி செய்து வருகிறது. அதைக் கூட அது உரிய முறையில் செய்யவில்லை. சான்றாதாரங்கள், புள்ளி விவரங்களோடு பேசவதுமில்லை, முன் வைப்பதுமில்லை. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகள், அணுகுமுறைகள், தந்திரோபாயம் போன்ற எதையும் கூட அது கொண்டிருக்கவில்லை.

அதாவது செயற்பாட்டியக்கமே அதற்கில்லை. 1949 இல் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரையில் அதற்குச் செயற்பாட்டுப் பாரம்பரியம் என்ற ஒன்றே கிடையாது. அரசியல், பொருளாதாரம், சமூகவியல், பண்பாடு என எந்த விடயத்திலும் அது எத்தகைய நிபுணத்துவத்தையும் நிபுணர்களையும் கொண்டதில்லை. இதற்கான கட்டமைப்பு எதையும் உருவாக்கியதுமில்லை. முன்னராவது பலரும் மதிக்கக் கூடிய அளவுக்கு செல்வநாயம், நாகநாதன், திருச்செல்வம், அமிர்தலிங்கம், கா.பொ. இரத்தினம், வன்னியசிங்கம், செல்லையா இராசதுரை, இராசமாணிக்கம், தருமலிங்கம், சூசைதாசன் போன்ற ஆளுமையுள்ள தலைவர்கள் இருந்தனர். சில போராட்டங்களை அவர்கள் முன்னெடுத்ததும் உண்டு. மக்களுடன் உறவாடலை நிகழ்த்தியிருக்கிறார்கள். இன்றோ அதுவும் இல்லையென்றாகி விட்டது.

இதைக் குறித்து தமிழரசுக் கட்சியை ஆதரிப்போர் கூடச் சிந்திப்பதில்லை. இதில் படித்தவர்கள், மூத்தவர்கள், இன்றைய தலைமுறையினர் அனைவரும் அடக்கம். எல்லோரும் தெரிந்து வைத்திருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் அரச எதிர்ப்பாகும். எந்த நிலையிலும் அரசாங்கத்தை எதிர்த்து விட்டால்போதும் என்றே பலரும் கருதுகிறார்கள். இது காகம் திட்டி மாடு சாகாது என்பதற்கு ஒப்பானது. இதனால்தான் தமிழர்கள் எதிர்பார்த்த எதுவுமே நிகழாமல் இருக்கிறது. தற்போது இன்னொன்றும் சேர்ந்துள்ளது. அது தான் புலிகளுக்கான ஆதரவாக் காட்டிக் கொள்ளும் போக்கும் தமிழ்த்தேசியம் என்ற சொல்லாடலுமாகும். உண்மையில் இவர்கள் இது இரண்டுக்கும் நேர்மையாகவும் இல்லை.

அடுத்த காரணம், அதனுடைய அரசியல் நிலைப்பாட்டினாலும் செயற்பாட்டின்மைகளாலும் தமிழ் மக்கள் மேலும் மேலும் நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாகும். இப்பொழுதும் நெருக்கடிகளை உற்பத்தி செய்கின்ற விதமாகவே அதனுடைய அரசியல் உள்ளது. தொடக்கத்தில் சமஸ்டி, பிரிவினை என்ற அரசியல் நிலைப்பாட்டிலிருந்த தமிழரசுக் கட்சி, இப்போது ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது. அப்படி இறங்கி வந்தாலும் அதனுடைய தலைவர்கள், பாராளுமன்றப் பிரதிநிதிகளின் பேச்சுகள் எதிர்ப்பரசியல், யதார்த்தத்துக்கு மாறான அரசியல், பிரிவினை அரசியல் என்ற விதமாக உயரத்திலேயே உள்ளன.

அதாவது தேர்தல் (வாக்கு) அரசியலுக்கு ஏற்றவிதமாகப் பேசுகிறார்கள். இது ஒரு முரண் நிலையாகும். பேசுவது ஒன்றாகவும் நடைமுறை வேறு விதமாகவும் (இரகசிய இணக்கப்பாடாகவும்) உள்ளது. ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையைப் பெற வேண்டும் என்ற நிலையிலுள்ள மக்களுக்கு இத்தகைய முரண் நிலை அரசியல் பொருத்தமானதே அல்ல.

இதற்குக் காரணம், தாம் பேசுகின்ற அரசியலை செயல் வடிவமாக்குவதற்கான ஆளுமையோ அறிவோ திராணியோ, அர்ப்பணிப்போ இவர்களில் எவருக்குமே கிடையாது என்பதாகும். இதனால் தான் மக்களுக்குத் தொடர்ந்தும் நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. குறைந்த பட்சம், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளைக் கூட வினைத்திறனோடு இயக்க முடியாத நிலையில் தமிழரசுக் கட்சி உள்ளது.

வடமாகாணசபையில் நடந்தவை என்ன என்பது அனைவரும் அறிந்தது. 600 க்கு மேற்பட்ட பிரேரணைகளை நிறைவேற்றிய வட மாகாணசபை அதனுடைய ஆட்சிக் காலத்தில் உருப்படியாக எதையும் செய்யவில்லை. மட்டுமல்ல, ஆளும் தரப்புக்குள்ளேயே அடிதடி குத்து வெட்டு, குழி பறிப்பு என்றே அதனுடைய ஆட்சிக்காலம் முடிந்தது. உள்ளூராட்சி மன்றங்களிலும் இதுதான் நிலை. இதனால் தான் அது பல உள்ளூராட்சி மன்றங்களை இழந்தது. இருக்கின்றவையும் ஜனநாயக அடிப்படையில் செயற்படுவதில்லை. தமிழரசுக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் ஏதேச்சாதிகாரமாகவும் ஊழல் மோசடிகளிலும்தான் சிக்கியுள்ளன. இது ராஜபக்ஸ தரப்பினரின் ஆட்சி முறைக்கு ஒப்பானது. பிற தரப்புகளை மதிப்பதுமில்லை. அவற்றுக்கான இடத்தை அளிப்பதுமில்லை. செயற்திறனோடு அரசியல் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் பிரச்சினைகள் படிப்படியாகத் தீர்ந்திருக்கும். மக்களுடைய வாழ்க்கை மேம்படும். இது அரசியலுக்கு(22ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் ஆதிக்கப் போட்டி

சீனாவின் பிரசன்னம் குறித்து இந்தியா விழிப்பு நிலையில் இருந்தாலும், சீனாவுடன் நெருங்கிய உறவாடும் இலங்கையுடன் அது முரண்பட விரும்பவில்லை

இந்தியாவின் பாதுகாப்புக்கான எந்த அச்சுறுத்தலும், இலங்கைக்கும் அச்சுறுத்தலே என்று புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கடந்த வாரம் ரைம்ஸ் ஒவ் இந்தியாவுக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருக்கிறார்.

அவரது அந்தக் கருத்து வெளியாகிய அதே நாள், இந்தியாவின் மற்றொரு நாளிதழான தி ஹிந்துவில், இலங்கையில் சீன இராணுவத்தின் பிரசன்னம் குறித்து கவலை கொள்வதாக, மாநில புலனாய்வுத் துறையின் அறிக்கையை அடிப்படையாக வைத்து ஒரு ஆய்வுச் செய்தி வெளியாகியிருந்தது.

இலங்கையின் துறைமுகங்களை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு வேறெந்த நாடும் பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்று, மிலிந்த மொரகொட கூறியிருந்தாலும் இந்தியாவுக்கு எதிராக இலங்கை மண்ணைப் பயன்படுத்துவதற்கு எந்த நாட்டையும் அனுமதிக்கப் போவதில்லை என்று கோட்டாபய ராஜபக்ஷவும், மஹிந்த ராஜபக்ஷவும், ஆட்சியில் இருந்த போது பலமுறை உத்தரவாதம் அளித்திருந்தாலும், இலங்கையில் அதிகரித்து வரும் சீனப் பிரசன்னம், இந்தியாவுக்கு கவலையளிப்பதாகவே உள்ளது.

இந்தியாவைக் கண்காணிப்பதற்கு இலங்கையை சீனா ஒரு தளமாகப் பயன்படுத்த தொடங்கியிருப்பது, புதுடில்லிக்கு முக்கியமானதொரு பிரச்சினையாக மாறியிருக்கிறது.

இந்த விவகாரத்தை இந்தியா அவ்வளவு இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை. அப்படி எடுத்துக் கொள்ளவும் முடியாது. ஏனென்றால், சீனா இப்போது இந்தியாவை தன் நேரடி மற்றும் மறைமுக பலத்தைப் பயன்படுத்தி சுற்றி வளைக்கத் தொடங்கியிருக்கிறது.


சீனாவின் 'யுவான் வாங் -5' என்ற செய்மதி, மற்றும் ஏவுகணை வழித்தடக் கண்காணிப்புக் கப்பல், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்துச் சென்ற பின்னர், இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனை இன்னும் அதிகரித்திருக்கிறது.

வழக்கமாக, இந்தியாவின் மத்திய புலனாய்வு அமைப்புகள் தான், சீனாவின் பிரசன்னம் குறித்த கரிசனைகளை– எச்சரிக்கைகளை விடுப்பது வழக்கம். அதற்கு மாறாக, இப்போது இலங்கையில் குறிப்பாக வடக்கில் சீன இராணுவத்தின் பிரசன்னம் அதிகரித்திருப்பது குறித்து, எச்சரிக்கை விடுத்திருக்கிறது மாநில அரசின் புலனாய்வு அமைப்பு.

மாநில அரசின் புலனாய்வு அமைப்பு, மாவட்டங்களின் முக்கிய நகரங்கள் மற்றும் அளவிலான பொலிஸ் தலைமையகங்களுக்கு, விடுத்துள்ள எச்சரிக்கையில், சீன புலனாய்வாளர்களின் ஊடுருவல்கள் நிகழலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

இலங்கையின் அரசியல் கட்சி ஒன்றின் துணையுடன், சீன இராணுவப் புலனாய்வாளர்கள், தமிழகத்துக்குள் ஊடுருவியது பற்றிய செய்தியும், வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் அணுமின் நிலையங்கள், விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் பிரிவு, விமான நிலையங்கள், துறைமுகங்கள் என ஏராளமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இருக்கின்றன. இந்த கேந்திரங்கள் இராணுவ ரீதியாகவோ, மூலோபாய ரீதியாகவோ, பாதுகாப்பு ரீதியாகவோ முக்கியத்துவமானவை. இவ்வாறான இடங்களில் பாதுகாப்பில் மத்திய அரசும் அதன் புலனாய்வு நிறுவனங்




களும் கவனமாக இருக்கின்ற போதும், மாநில புலனாய்வுப் பிரிவு விடுத்திருக்கின்ற எச்சரிக்கை, இந்திய அரசாங்கத்துக்கு சிக்கலை தோற்றுவித்திருக்கிறது. காரணம், சீனாவின் பிரசன்னம் குறித்து இந்தியா விழிப்பு நிலையில் இருந்தாலும், சீனாவுடன் நெருங்கிய உறவாடும் இலங்கையுடன், அது முரண்பட விரும்பவில்லை. அவ்வாறு முரண்படுவது இலங்கை அரசாங்கத்தை சீனாவை நோக்கி இன்னும் நெருங்கிச் செல்லும் நிலையை ஏற்படுத்தி விடும் என்ற அச்சம், அதற்கு உள்ளது.

இவ்வாறான நிலையில் தான் மாநில புலனாய்வு அமைப்பின் எச்சரிக்கை வெளியாகியிருக்கிறது. இதற்குப் பின்னரும், புதுடில்லி இந்த விவகாரத்தில் தற்காப்பு நிலையில் மதில் மேல் பூனையாக இருக்க முடியாது.

அதேவேளை, வடக்கில் சீன இராணுவப் பிரசன்னம் குறித்த தமிழக புலனாய்வு அறிக்கை எந்தளவுக்கு உண்மையானது என்ற கேள்விகள் உள்ளன. ஏனென்றால் வெளிப்படையாக சீன இராணுவம் வடக்கில் இயங்கவில்லை. அதற்கான ஆதாரங்களும் வெளியாகவில்லை.

ஆனால் இராணுவ பாணி சீருடையணிந்த சீனர்கள் பலர், வடக்கில் புதிதாக முளைத்த கடல் அட்டைப் பண்ணைகளில் காணப்படும் படங்கள் வெளியாகியிருந்தன.

அவை சீனப் பணியாளர்கள் என்று கூறப்பட்டாலும், சீன மக்கள் விடுதலை இராணுவம் அல்லது சீன புலனாய்வு அமைப்புகளைச் சேர்ந்தவர்களிடம் இருந்து, அவர்களை வேறுபடுத்தி அறிவதற்கான எந்த வழிகளும் இல்லை.

தமிழக அரசின் புலனாய்வுப் பிரிவு, கடலட்டைப் பண்ணைகளில் சீன புலனாய்வுப் பிரிவினர் அதிநவீன கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்துவதாகவும், கடலட்டை பிடிப்பதை அவதானிப்பது என்ற பெயரில் சீன தூதுவரும் அதிகாரிகளும் அடிக்கடி இந்திய கடல் எல்லை வரை வந்து கண்காணித்துச் செல்வதாகவும் எச்சரித்திருக்கிறது.

வடக்கில், சீனா இராணுவ ரீதியாக கால் வைக்க முடியாதென்பது சீனாவுக்கு தெரியும். ஏனென்றால் இந்தியா அதனை தீவிரமாக எதிர்க்கும்.

ஏற்கனவே, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது, திருகோணமலை சீனக்குடாவில், விமானங்களைப் பழுதுபார்க்கும் மையத்தை அமைக்க சீனா முற்பட்டது.

அதற்கு அரசாங்கமும் அனுமதி அளித்த பின்னர் புதுடில்லி தலையிட்டு அதனை தடுத்து நிறுத்தியது. எனவே, பொருளாதார அல்லது முதலீட்டுத் திட்டங்களின் மூலமாகத் தான் வடக்கில் கால் வைக்கலாம் என்பதை சீனா உணர்ந்திருக்கிறது. அவ்வாறாகத் தான், நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய இடங்களில், கலப்பு மின் திட்டங்களை அமைக்க சீனா முற்பட்டது. அதனையும் இந்தியா தடுத்து நிறுத்தி விட்டது. இப்போது கடலட்டைப் பண்ணைகளின் ஊடாக சீனா வடக்கில் தீவிரமாக கால் வைக்கத் தொடங்கியிருக்கிறது. வடக்கில் கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்படுவதால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுவதாக முறையிட்டுள்ளனர். அவர்களின் எதிர்ப்பைக் கண்டு கொள்ளாமலேயே, புதிய கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் முயற்சிகள் தொடர்கின்றன.

கடலட்டைப் பண்ணைகளில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவற்றுடன் பேச்சு நடத்தியதாகவும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தார். இது, சீனாவுக்கு எதிரான உணர்வுகளை தணிக்கும் கருத்தாக இருக்கலாம். அதாவது சமநிலையை பேணுகின்ற முயற்சி.

அதேவேளை, இந்தியாவில் கடலட்டை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அங்கு சட்டவிரோதமாகப் பிடிக்கப்படும் கடலட்டைகள் கடல் வழியாக கடத்தப்பட்டு, இலங்கையின் ஊடாகவே சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் கடலட்டை பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அங்குள்ள நிறுவனங்கள், இலங்கையில் கடலட்டை பண்ணைகளில் முதலீடு செய்ய முன்வருமா– அதற்கு சட்ட அங்கீகாரம் உள்ளதா என்பன கேள்விக்குரிய விடயங்கள்.

எவ்வாறாயினும், சீன கடலட்டைப் பண்ணைகளை இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புபடுத்தும், முயற்சிகளை மத்திய அரசு எவ்வாறு எடுத்துக் கொள்ளப் போகிறது என்பது கவனத்துக்குரிய விடயமாக உள்ளது.

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**-கேணல் ஹரிகரன் -**



ஏனென்றால், இலங்கைக்கு இனி கடன்களை வழங்குவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை இந்திய அரசாங்கம் எடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு எட்டப்பட்டதும், முதலீடுகளின் மூலம் இலங்கைக்கு உதவவுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது,

அத்தகைய முதலீடுகள் கடலட்டைப் பண்ணை வடிவில் வந்தாலும் ஆச்சரியமில்லை. ஏனென்றால், மூன்று தீவுகளில் கலப்பு மின் திட்டங்களை அமைக்க சீனா முன்வந்த போது இந்தியா அதனை தட்டிப் பறித்தது அது போல, சீனாவுடன் போட்டி போட்டு, கடலட்டைப் பண்ணைகளில் இந்தியாவும் முதலிடக் கூடும்.

சீனப் பிரசன்னத்தை குறைப்பதை நோக்கமாக கொண்டு அவ்வாறான (20ம் பக்கம் பார்க்க)



# ஒரு மக்கள் இயக்கத்திற்கான சாத்தியப்பாடுகள்!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



தமிழ் தேசிய அரசியலானது, ஒரு காலத்தில் தலைமையிலான மிதவாதிகளால் அன்றைய அரசியல் சூழலை சரியாக கையாள முடியாமையால் தான், ஆயுத இயக்கங்கள் எழுச்சியுற்றன. அன்றிருந்த உலக அரசியல் சூழலுக்கு மாறாக ஜே.ஆர்.ஜெயவர்தன செயற்பட்டதன் விளைவாக இந்தியாவின் தலையீடு நிகழ்ந்தது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கரிசனைகளை புறம்தள்ளி செயற்பட்டதன் காரணமாகவே இந்தியா சில கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்த பின்புலத்தில் தான், ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளித்து, அவர்களை வளர்த்து விட்டது.




இப்போதுள்ள நிலைமை முற்றிலும் மாறானது. ஆயுத இயக்க அரசியல் வீழ்ச்சிக்குப் பின்னரான சூழலில், அரசியலை எவ்வாறு முன்னெடுப்பது, எந்த இலக்கின் அடிப்படையில் முன்னெடுப்பது என்னும் கேள்வியுடன் தான், கடந்த 13 வருடகால தமிழ் தேசிய அரசியல் நகர்ந்திருக்கின்றது.

இதனை ஆழமாக நோக்கினால், தமிழ் தேசிய அரசியல் படிப்படியாக பலவீன. மடைந்து சென்றிருப்பதை காணலாம். இதற்கு என்ன காரணம்? தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்து வரும் அரசியல் கட்சிகளின் தலைமைத்துவ ஆற்றலின்மையே இதற்கான பிரதான காரணமாகும்.

ஒரு வலுவான தலைமை இல்லாத போது மற்றவர்களின் செயற்பாடுகளுக்காக காத்திருக்கும் அரசியல் போக்கே மேலாதிக்கம் பெறும். இப்போது அது தான் நடந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் அரசியல் கட்சிகளின் பலவீனத்தை ஈடுசெய்யும் வகையிலான மக்கள் இயக்கமொன்றை கட்டியெழுப்ப முடியுமா? இதற்கான பதிலை காண்பதற்கு, முதலில் கடந்த 13 வருட கால தமிழ் சிவில் சமூக செயற்பாடுகளை மதிப்பீடு செய்ய வேண்டும்.

2009இற்கு முன்னரான தமிழ் தேசிய அரசியல் என்பது, போர் வெற்றியை இலக்காகக் கொண்ட அரசியல் செயற்பாடுகளின் கூட்டு மனோநிலையில் கட்டமைக்கப்பட்டிருந்தது. ஆனால் 2009 இற்குப் பின்னரான தமிழ் தேசிய அர சியலானது, போரின் வினைவுகளின் அடிப்படையிலான கூட்டு மனோ நிலையின் வெளிப்பாடாகும்.

இந்த மனோநிலையை இரண்டு வகையில் நோக்கலாம். ஒன்று, போருக்குப் பின்னரான சூழலை புரிந்து கொண்டு, தற்பாதுகாப்பு நிலை அரசியலுக்குச் செல்லும் வழி முறைகளை ஆராய வேண்டுமென்னும் நிலைப்பாடு தொடர்பானது. அடுத்தது, வெற்றிக்கான கனவு கலைந்து போன ஆதங்கத்தில், பழிவாங்குவதற்கான வாய்ப்புகளை தேடும் மனோபாவம் தொடர்பானது.

இந்த இரண்டு போக்கிற்குள்ளும் தான் கடந்த 13 வருடகால தமிழ் தேசிய அரசியல் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அரசியலை தற்காப்பு நிலையில் பேணிக் கொள்ளும் நிலைப்பாடானது, முற்றிலும் அறிவு நிலை சார்ந்த அணுகுமுறையாகும். ஆனால் இந்த நிலைப்பாட்டிற்கு ஆதரவானவர்கள் குறைவாகவே இருந்தனர், இருக்கின்றனர். ஆனால் உணர்வெழுச்சியில் சிந்திப்பவர்களே அதிகம். இது இயல்பான ஒன்று தான். ஆனால் யுத்தம் முடிவுற்று 13 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட, இவ்வாறான நிலைமை தொடர்வது தான் சிக்கலானது. அறிவு நிலைக்கும் உணர்வெழுச்சி நிலைக்கும் இடையில் அரசியல் சிக்குப்பட்டு விடக் கூடிய சூழலில் தான், சிவில் சமூகத்தின் தலையீடு அவசியப்படுகின்றது. யுத்த காலத்தில் வடக்கு, கிழக்கை பொறுத்த வரையில் சிவில் சமூகமென்று கூறக் கூடியளவிற்கு எந்தவொரு செயற்பாடும் இருந்திருக்கவில்லை. ஆனால் யுத்தத்திற்குப் பின்னரான சூழலில், சிவில் சமூகத்திற்கான தேவை பிரதானமாக இருந்தது. இந்த அடிப்படையில் தான் சிவில் சமூக குழுக்கள் முகம் காட்டியிருந்தன. ஆனால் அவ்வாறு தங்களை சிவில் சமூகமாக காண்பிக்க முற்பட்டவர்கள், சிவில் சமூகத்திற்கான பண்புகளோடு செயற்பட்டதாக கூற முடியாது. தமிழ் மக்கள் பேரவை எவ்வாறு இறுதியில் அரசியல் கட்சிகளின் முரண்பாடுகளுக்குள் சிக்குண்டு சீரழிந்ததோ, அதே போன்று தான் தமிழ் சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள முயற்சித்தவர்களும் கூட, இறுதியில் அரசியல் கட்சி சார்பு நிலைக்குள் சிக்குண்டு, சிதைந்தனர்.

அரசியல் கட்சிகள் விடயங்களை சரியாக முன்னெடுக்காமல் இருக்கின்ற போது, போலியான தேசியவாத மாயைக்குள் மக்களை சிக்கவைக்கும் முயற்சிகளை முன்னெடுக்கும் போது தான், சிவில் சமூகத்தின் தலையீடு நிகழ வேண்டும். சிவில் சமூகம் மக்கள் மத்தியில் உண்மைகளை முன்வைத்து, அரசியல் கட்சிகளுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த வேண்டும். அந்த நெருக்கடிதான் சிவில் சமூகம் அரசியல் கட்சிகள் மீது ஏற்படுத்தும் அழுத்தங்களாகும். ஆனால் நமது சூழலில் நடந்ததோ வேறு. கூட்டமைப்பின் தவறுகளை சுட்டிக்காட்டி, அதன் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு மாறாக, கூட்டமைப்புக்கு எதிர் நிலையிலிருந்த அரசியல் கட்சிகளின் தொண்டர்களாகவே சிவில் சமூக அமைப்புகள் செயற்பட் டன.

அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டிற்கும் சிவில் சமூக நிலைப்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடில்லாமல் போனது. உண்மையில் மேலே குறிப்பிடப்பட்டது போன்று சிவில் சமூகம் விடயங்களை அறிவுபூர்வமாக ஆராய்ந்து, தற்காப்பு நிலை அரசியல் நிலைப்பாட்டிற்கு சார்பாக செயற்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறான தற்காப்பு நிலையை எடுக்கத் தவறுகின்ற அனைத்து அரசியல் கட்சிகளையும் விமர்சிக்கும், அவர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் ஒரு கூட்டு பிரசாரத்தை முன்னெடுத்திருக்க வேண்டும். 2009 இற்குப் பின்னரான தற்காப்பு நிலைமை என்பது, முதலில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் கோரிக்கையாக இருந்திருக்க வேண்டும்.

அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் ஒன்றுபட்டு நிற்க வேண்டுமென்னும் கோரிக்கையை முன்வைத்திருக்க வேண்டும். இதற்கு மாறாக செயற்பட முற்பட்ட அரசியல் கட்சிகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இவற்றில் எதனையுமே தமிழ் சிவில் சமூக அமைப்புகள் என்போர் செய்யவில்லை. இதன் காரணமாகவே சிவில் சமூக செயற்பாடுகள் பலமடையவில்லை .

இந்த பட்டறிவை கருத்தில் கொண்டு தான், மக்கள் இயக்கம் தொடர்பில் சிந்திக்க வேண்டும். கடந்த காலத்தை கருத்தில் கொள்ளாமல் முன்னெடுக்கப்படும் எந்தவொரு நகர்வுகளும் வெற்றியளிக்காது. எதிர்காலத்தை வரையறுக்க விரும்பினால் கடந்த காலத்தை படியென்று ஒரு கூற்றுண்டு. ஆனால் நமது அரசியல் சூழலை பொறுத்த வரையில் கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டுமென்னும் அரசியல் பண்பை எவரிடமும் காண முடியவில்லை இதன் காரணமாகவே அரசியல் கட்சிகளும் முன் நகரவில்லை அரசியல் கட்சிகளை சரியான வழி நோக்கி நகர்த்த வேண்டிய பொறுப்புள்ள சிவில் சமூகத்தாலும் முன்நகர முடியவில்லை இருந்தது போன்ற நிலையில் இப்போதில்லை. இதனை அனைவராலும் உணரமுடியும். ஆரம்ப காலத்தில் இருந்தது போன்றதொரு நிலையைக் கூட இப்போது காணமுடியவில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போன்று தான், இன்றைய தமிழ் தேசிய அரசியல் நகர்கின்றது. பாராளுமன்ற கதிரைகளை கைப்பற்றுவதைத் தவிர, எந்தவொரு இலக்கும் இன்றைய தமிழ் தேசிய அரசியலில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் போக்கை மாற்றியமைக்க வேண்டுமென்று பலர் முயற்சி செய்தனர். மாற்றுத் தலைமை தொடர்பில் சிந்திக்கப்பட்டது. அதற்கான முயற்சிகளிலும் பலர் ஈடுபட்டனர். ஆனால் அந்த முயற்சிகள் எவையுமே வெற்றியளிக்கவில்லை.

மாறாக மேலும் புதிய கட்சிகள் உருவாகுவதற்கும் பிளவுகள் அதிகரிக்கவுமே வழி வகுத்தது. ஒரு சிலர் ஒன்று கூடினால், ஒரு கட்சியென்னும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் தோல்வியடைந்த பின்னணியில் தான், மாற்றுத் தலைமையொன்றின் தேவை உணரப்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் தமிழ் மக்கள் பேரவை உருவானது. இதில் கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகளில் ஒன்றான சித்தார்த்தன் தலைமையிலான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எப்.), கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முனன்ணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) ஆகிய கட்சிகள் அங்கம் வகித்திருந்தன.

அரசியல் கட்சிகள் மீது, அழுத்தங்களை பிரயோகிக்கும் மக்கள் இயக்கமொன்றை கட்டியெழுப்புவதே இதன் பிரதான நோக்கமாக இருந்தது. ஆரம்பத்தில் தமிழ் மக்கள் பேரவைக்கு பலமான ஆதரவும் இருந்தது. மக்கள் மத்தியிலும் சாதகமான அபிப்பிராயங்கள் இருந்தன. இவ்வாறானதொரு பின்னணியில் தான் மக்களை அணி திரட்டும் நோக்கில், இரண்டு எழுக தமிழ் நிகழ்வுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன. ஒரு மக்கள் இயக்கமாக திரட்சி பெறுவதற்கான சாதகமான வாய்ப்புகள் அனைத்தையும் தமிழ் மக்கள் பேரவை கொண்டிருந்தது. ஆனால் அதனை முன்னெடுப்பதில் தமிழ் மக்கள் பேரவை தோல்வியடைந்தது. தமிழ் மக்கள் பேரவையின் தோல்வியுடன் மக்கள் இயக்கம் ஒன்றை கட்டியெழுப்ப முடியுமென்னும் எண்ணக்கரு முளையிலேயே கருகிப் போனது.

அதன் பின்னர் பலமானதொரு மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளில் எவருமே ஈடுபடவில்லை. ஆனால் அப்படியான ஒன்றை உருவாக்க வேண்டுமென்னும் கரிசனையை சிலர் அவ்வப் போது வெளிப்படுத்தி வருகின்றனர். உண்மையில் அவ்வாறானதொரு மக்கள் இயக்கத்திற்கான தேவை இருக்கின்றதா?

இரண்டாவது கேள்வி - கடந்த 13 வருடங்களில் ஏன் அவ்வாறான முயற்சிகள் வெற்றி பெறவில்லை .

அரசியல் கட்சியே, ஒரு மக்கள் கூட்ட. த்தை வழிநடத்தும் பிரதான அரசியல் ஸ்தாபனமாகும். ஆனால் ஒரு அரசியல் ஸ்தாபனம் பலவீனமாக இருக்கின்ற போது தான், அரசியல் கட்சிக்கு மாற்றாக, மக்கள் இயக்கம் தேவைப்படும்.

# அ.தி.மு.க.வை பழி தீர்க்கிறதா தி.மு.க?

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆ.ரால் தோற்றுவிக்கப்பட்ட அ.தி.மு.க. ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து, 51ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்தத் தருணத்தில் அ.தி.மு.க.வில் தலைமை குறித்த உட்கட்சி பூசல் உச்சகட்டத்தை அடைந்திருக்கிறது.

அ.தி.மு.க.வை தன்னுடைய அரசியல் எதிரியாக கருதும் தி.மு.க., ஆளுங்கட்சியாக இருக்கும் இந்த தருணத்தில், உட்கட்சி பூசலால் தவிக்கும் அ.தி.மு.க.வை அழிப்பதற்கான அனைத்து வேலைகளையும் செய்து வருகிறது. ஆனால் அதி.மு.க.வை யாராலும் வீழ்த்த முடியாதென அக்கட்சியின் இடைக்காலப் பொதுச்செயலாளர் எடப்பாடி உரக்க கூவிக் கொண்டேயிருக்கிறார்.

இந்நிலையில் அ.தி.மு.க.வின் இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அவருடன் பெரும்பான்மையாக இருக்கும் கட்சி நிர்வாகிகள், சட்டப்பேரவை எதிர்க்கட்சி



துணைத் தலைவரான பன்னீர்செல்வத்தை நீக்கி விட்டு, அவருக்கு பதிலாக முன்னாள் அமைச்சரும், எடப்பாடியாரின் தீவிர ஆதரவாளருமான ஆர்.பி. உதயகுமாரைத் தெரிவு செய்து, இது தொடர்பான விவரத்தை சட்டப்பேரவை சபாநாயகருக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்துகிறார்.

இதே தருணத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த பன்னீர்செல்வம், சட்டப்பேரவை எதிர்க்கட்சி துணைத் தலைவர் பதவியில் தொடர்ந்து நீடித்து வருவதாகவும், தேர்தல் ஆணையத்தின் தரவுகளின் அடிப்படையில் அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளராக தான் இன்றும் நீடித்து வருவதாகவும் சபாநாயகருக்கு கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்.

எடப்பாடிக்கு பழனிச்சாமி மற்றும் பன்னீர்செல்வம் இடையேயான கருத்து வேறுபாட்டை தனக்கு சாதகமாக பயன்படுத்தி, அ.தி.மு.க.வை பலவீனப்படுத்துவதற்கான முயற்சியை சபாநாயகர் மூலம் தி.மு.க.வின் தலைவரான மு.க.ஸ்டாலின் மேற் கொண்டிருக்கிறார் என்று அ.தி.மு.க.வினர் குற்றம் சாட்டுகிறார்கள்.

இதேவேளை, சபாநாயகர் எதிர்க்கட்சி துணைத் தலைவர் பதவி தொடர்பில் கூறுகையில், எதிர்க்கட்சி துணைத் தலைவர் என்றொரு பதவி பேரவை விதிகளின்படி இல்லை. அதனை கட்சியின் இடைக்காலப் பொதுச்செயலாளர் மாற்றும்படி வலியுறுத்துவதை ஏற்க வேண்டிய கட்டாயம் சபாநாயகருக்கு இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சபாநாயகர் சொல்வது உண்மை என்றாலும், தமிழகத்தை பொறுத்தவரை தி.மு.க.-அ.தி.மு.க. என்ற இருதுருவ அரசியல், அக்கட்சியின் தலைவர்களின் மறைவிற்குப் பிறகு வீரியம் இழந்து விட்டடது. அதனை மெய்ப்பிக்கும் வகையில், அ.தி.மு.க.வின் பன்னீர்செல்வம் சட்டப்பேரவையில் தி.மு.க. அரசை புகழ்ந்து பேசியிருப்பதை சாட்சியாக எடுத்துக் கொள்ளலாம். மேலும் அ.தி.மு.க.வின் மக்களவை உறுப்பினர் ரவீந்திரநாத் தி.மு.க. தலைவரான ஸ்டாலினை நேரில் சந்தித்து பாராட்டியிருப்பதும் அ.தி.மு.க.வின் பலவீனத்தையும், உட்கட்சி பூசலில் திளைத்து வருவதும்





அப்பட்டமாக தெரியவருகிறது.

ஆனால் தி.மு.க.வினரோ, சட்டப்பேரவையில் மத்திய அரசு அறிமுகப்படுத்தவிருக்கும் இந்தி திணிப்புக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிகிறது என்று தெரிந்திருந்தும், அதற்கு மறைமுகமாக ஆதரவு தெரிவிக்கும் வகையில், எதிர்க்கட்சி துணைத் தலைவர் விவகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு, எடப்பாடி தரப்பினர் சட்டப்பேரவையில் கலகத்தில் ஈடுபட்டனர். இதனை துல்லியமாக அவதானித்த சபாநாயகர் கலகத்தில் ஈடுபட்ட உறுப்பினர்களை பேரவையிலிருந்து வெளியேற்றுமாறு காவலர்களுக்கு உத்தரவிட்டார். தமிழகத்தில் சட்ட ஒழுங்கை திட்டமிட்டு சீர்குலைக்க வேண்டும் என்று செயற்படுவது அ.தி.மு.க. தான். அதனால் சட்டம் ஒழுங்கை காப்பாற்ற வேண்டிய பொறுப்பை தி.மு.க. தன் வசம் எடுத்துக் கொண்டு, அ.தி.மு.க.வின் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்திற்கு அனுமதி மறுத்தது. தி.மு.க. அரசு சரியான பாதையில் தான் அ.தி.மு.க.வை கையாளுகிறது.

பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமியும் சில தருணங்களில் மோதிக் கொள்வார்கள். பிறகு ஒன்றாக கரம் கோர்த்துக் கொள்வார்கள். இது கடந்த காலங்களில் நடைபெற்ற நிகழ்வு. இதனால் எங்களுக்கு ஓபிஎஸ்ஸைப் பயன்படுத்தி தான் அ.தி.மு.க.வைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற அவசியமில்லை.

அத்துடன் பன்னர்செல்வத்தை வைத்து பா.ஜ.க. தான் அ.தி.மு.க.வை பலவீனப்படுத்தி, அக்கட்சியை ஆக்கிரமிக்க நினைக்கிறது. இதனை அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கும், இரண்டாம் கட்ட தலைவர்களுக்கும் மறைமுகமாக உணர்த்துவதற்காக தான் அ.தி.மு.க. உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அனுமதி கேட்டபோது மறுக்கப்பட்டது. இதனை அ.தி.மு.க.வின் உண்மையான தொண்டர்கள் உணர வேண்டும் என்று தி.மு.க.வினர் தெரிவிக்கிறார்கள்.

மேலும் ஜெயலலிதாவின் மரணம் குறித்து நீதியரசர் ஆறுமுகசாமியின் ஆணையத்தை அமைத்தது அ.தி.மு.க. அரசு தான். அவரின் நேர்மையான விசாரணையை கண்டு அதிர்ச்சியடைந்துஅவரின் விசாரணையை அ.தி.மு.க.வினர் அவர்களது ஆட்சி காலம் முழுவதும் நீட்டித்துக் கொண்டே வந்தனர்.

தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் நீதியரசர் ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணை அறிக்கையை சட்டப்பேரவையில் தி.மு.க. தாக்கல் செய்தது. இந்த அறிக்கையில் சசிகலா, அமைச்சர் விஜயபாஸ்கர், பன்னீர் செல்வம் உள்ளிட்ட நால்வர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது.

இவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்று ஆணையம் பரிந்துரைத்திருக்கிறது. குறிப்பாக ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது சசிகலாவின் கண் அசைவிற்கு கட்டுப்பட்டவர்களாக தலைமை செயலாளர் ராம்மோகன் ராவ், சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர், அன்றைய பொறுப்பு முதல்வராக இருந்த ஓ. பன்னீர்செல்வம், அப்பல்லோ மருத்துவமனையின் தலைமை என்று அனைவரும் உடந்தையாக இருந்துள்ளார்களென சுட்டிக்காட்டி இருக்கிறது. இந்த விடயத்தில் தர்மயுத்தம் நடத்தி அரசியல் ஆதாயம் அடைந்த பன்னீர்செல்வம், விசாரணை ஆணையம் ஒன்பது முறை சம்மன் அனுப்பியும் ஆஜராகாமல் இருந்தார். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நடைபெற்ற விசாரணையின் போதும் முழுமையான ஒத்துழைப்பினை நல்கவில்லை.

அன்றைய திகதியில் சுகாதாரத்துறை அமைச்சராக பணியாற்றிய விஜயபாஸ்கர் ஒரு மருத்துவராக இருந்தும், அவருடைய தலைவிக்கு இழைக்கப்பட்ட மருத்துவ அநீதிக்கு உடந்தையாக இருந்துள்ளார். இவர்கள் அனைவரும் இணைந்து ஜெயலலிதாவின் மரணத்தை ஒரு நாள் தள்ளி அறிவித்துள்ளனர்.

ஜெயலலிதாவின் மரணம் குறித்த ஆறுமுகசாமி ஆணையத்தின் அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இதனால் அ.தி.மு.க.விலுள்ள தலைவர்களின் இருண்ட பக்கங்களும், கருப்பு முகங்களும் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இதனை திசை திருப்பவே வழக்கம் போல் அ.தி.மு.க., சட்டப்பேரவையில் ஜனநாயக படுகொலை என்று அறிவித்து ஒரு நாள் திடீர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டது.

தமிழகத்தில் திராவிட சிந்தாந்தங்களின் இரு துருவ அரசியல் நிலவ வேண்டும் என தி.மு.க. விரும்பினாலும், மதவாத அரசியலை அழுத்தமாக கரம் பற்றி இருக்கும் பா.ஜ.க.வின் பிடியிலிருந்து அ.தி.மு.க. முழுமையாக விலகாத வரை, அ.தி.மு.க., பா.ஜ.க என இரண்டு வலிமையுள்ள அரசியல் கட்சிகளை எதிர்த்து அரசியல் செய்ய வேண்டிய கட்டாயம் தி.மு.க.வுக்கு இருக்கிறது. இதன் காரணமாக பா.ஜ.க.வையும், அ.தி.மு.க.வையும் பலவீனப்படுத்துவதுடன், தி.மு.க.வின் வலிமையை உயர்த்துவதில் தான் அக்கட்சி தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

அதே தருணத்தில் சட்டப்பேரவை எதிர்க்கட்சி துணைத் தலைவராக பன்னீர்செல்வத்தை சபாநாயகர் அங்கீகரித்திருப்பது, பா.ஜ.க.வின் மறைமுகமான அழுத்தத்திற்கு தி.மு.க. இணக்கம் தெரிவித்திருப்பதாகவே தெரிய வருகிறது. அத்துடன் தி.மு.க., அ.தி.மு.க.வை பழி வாங்கவில்லை என்றும், அதற்கு மாறாக கூட்டணி கட்சியினர் நடத்திய மத நல்லிணக்க மனித சங்கிலி அறப்போராட்டத்திற்கு உடனடியாக அனுமதி வழங்காமல் இழுத்தடித்த விவகாரத்தால் தி.மு.க. தற்போது கூட்டணி கட்சியினரை தான் கைகழுவி வருகிறது என்பது தெளிவாக தெரிய வருகிறது

## இந்தியா ஈழத்தமிழர் மீது.....

(21ம் பக்கத் தொடர்ச்சீ0 13ஐ அமுல்படுத்தாது விட்டால் ஈழத் தமிழர் வடக்கு, கிழக்கில் கட்டமைப்பு மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள் என தென்னிலங்கை புலமையாளர்கள் எச்சரிக்கை செய்யுமளவுக்கு நிலைமை உள்ளது என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியமானது. ஆனால் கடந்த 35 வருட கால உலகளாவிய மாற்றத்தையும் ஈழத்தமிழர் எதிர் கொண்ட நெருக்கடியையும் கவனத்தில் கொள்ளாது செயல்படுவது பொருத்தமற்றது. எனவே நெருக்கடி மிக்க சூழலில் மீளவும் ஈழத்தமிழருக்கான வாய்ப்பு அமைந்துள்ளது. அதனை அரசியல் நலன் கருதி கையாளாது ஈழத்தமிழரது நலன் கருதி நகர்த்தப்பட வேண்டும்.

தென்னிலங்கையும் இந்தியாவும் சர்வ தேசமும் எதனை வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் ஈழத்தமிழருக்கான தீர்வை ஈழத்தமிழரே முன் வைக்க வேண்டும். அனை த்து அரசியல் சக்திகளுடனும் ஒத்துழைத்து செயல் பட வேண்டும் என்பதற்காக அடிமைப்பட முடியாது. அவர்களது விருப்புகளுக்கு தலையாட்ட முடியாது.

தீர்வின் மூலம் ஈழத்தமிழரது எதிர்காலம் கட்டமைக்கப்பட வேண்டும். இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியை கையாளுவதற்காகவோ இந்தியாவின் நலனை பாதிக்கும் சீனாவை கையாளு வதற்காகவோ, மேற்குலகத்தின் செல்வாக்கினை பலப்படுத்துவதற்காகவோ, தென் னிலங்கையின் அரசியல் மீளெழுச்சிக்காகவோ ஈழத்தமிழர் மீது போலியான தீர்வை சுமத்த அனுமதிக்க முடியாது.

## வடக்கில் ஆதிக்கப் போட்டி

(18ம் பக்கத் தொடர்ச்சி) முடிவுகள் எடுக்கப்படுவதற்கான வாய்ப்புகளை நிராகரிக்க முடியாது. அவ்வாறான நிலைப்பாட்டை இந்தியா எடுக்குமானால், அது, வடக்கிலுள்ள மீனவர்களுக்குத் தான் மேலும் பேரிடியாக அமையும். ஏற்கனவே இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டுள்ள அவர்கள், மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலைக்குத் தான் கொண்டு செல்லும்.

# இந்தியா ஈழத்தமிழர் மீது மீளவும் ஒரு போலியான தீர்வைத் திணிக்க முயலுகிறதா?

இலங்கை அரசியலில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடியை அடுத்து பாரிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. உள்நாட்டு அரசியலிலும் பிராந்திய சர்வதேசத் தளத்திலும் ஈழத்தமிழர் விடயம் பொறுத்து அதிக மாற்றங்கள் அரங்கேறி வருகின்றன.

வெளிப்படையாகப் பார்த்தால் ஜெனீவாவில் நிகழ்ந்த வாக்கெடுப்பை அடுத்து நேர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளமை, விடுதலைப்புலிகளின் போராளிகள் கட்சியினர் புதுடில்லி சென்று உரையாடி திரும்பியுள்ளமை, சீனாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் வடக்கில் கோஷங்கள் எழுந்துள்ளமை, மீளவும் நாவலப்பிட்டியில் பொதுஜன பெரமுன கட்சியினரது எழுச்சி மாநாடு நடைபெற்றுள்ளமை போன்ற அரசியல் விடயங்கள் சம காலத்தில் அரங்கேறியுள்ளன. இவை யாவற்றையும் வெறும் அரசியலாக நோக்காது ஈழத்தமிழரது அரசியலுடன் தொடர்புபடுத்தி நோக்குவதே இக் கட்டுரையின் புரிதலாகும்.

இலங்கையில் சீன இராணுவத்தின் நடவடிக்கை இந்திய தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக தமிழக மாநில புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. குறிப்பாக சீன இராணுவத்தின் நடமாட்டம், செய்மதிகள் மூலமான கண்காணிப்பு சார்ந்த உயர் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு, ஆளில்லாத விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றமை போன்றவற்றால் கரையோரக் கண்காணிப்பினை அதிகரிக்குமாறு அனைத்து கரையோர மாவட்டங்களுக்கும் மாநில புலனாய்வுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இத்தகைய அறிவிப்பு தொடர்பில் கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்பே வடக்கு, கிழக்கு புலமைத் தளத்திலும் ஊடகத் தளத்திலும் உரையாடப்பட்டிருந்ததுடன், இந்திய-தமிழக மட்டத்திலும் அத்தகைய எச்சரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. ஆனால் புதுடில்லி மட்டுமல்ல இலங்கைக்கான இந்தியத் தூதரகமும் அதனை அசட்டை செய்திருந்தது. சீனா சார்ந்த விடயத்தை தாம் பார்த்துக் கொள்வதாகக் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான உரையாடலில் தூதுவர் தெரிவித்திருந்தமை நினைவு கொள்ளத் தக்கது.

இவை அனைத்துமே காலதாமதமான எச்சரிக்கைகளே. சீனா இந்து சமுத்திரத்தையும் இலங்கைத் தீவையும் தனது செல்வாக்குக்குள் வைத்துள்ளது என்பது வெளிப்படையான செய்தியாகும். தற்போது வடக்கு, கிழக்குக்குள்ளும் அதன் செல்வாக்கு வளர்ச்சியடைந்து வருகிறது.

ஜெனீவாவில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவான வாக்குகளாலும் முன் வைக்கப்பட்ட தீர்மானத்தாலும் பொருளாதார நெருக்கடியாலும் அதிக குழப்பத்தை தென்னிலங்கை எதிர்கொண்டுள்ளது. இத்தகைய தீர்மானத்தின் வளர்ச்சி ஈழத்தமிழருக்கு சாதகமானதாக அமைந்து விடுமா என்ற குழப்பத்தில் தென்னிலங்கை காணப்படுகிறது. அதனாலேயே ஏதோ ஒரு தீர்வுக்குச் செல்ல வேண்டிய நிலைக்குள் உலகளாவிய சூழலும் பிராந்திய சூழலும் காணப்படுகின்றன. இதனை கருத்தில் கொண்டே நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவராக செயல்பட்ட எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மீது ஐக்கிய நாடுகள் சபை மட்டத்திலேயே அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல்வாதி என்ற குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளதுடன் ஈழத்தமிழரது ஆயுதப் போராட்டத்தையும் அரசியலையும் முடிவுக்கு கொண்டு வந்தவர் என்ற விமர்சனமும் அவர் மீது உண்டு.

அதுமட்டுமல்ல பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தையும் அதன் அமைப்பையும் தலைமைத்துவத்தையும் அழித்தொழிப்பதில் அதிகம் பங்காற்றியவர் என்ற பெயரும் அவருக்குண்டு. குறிப்பாக இஸ்ரேல் பாலஸ்தீனம் செய்து கொண்ட ஒஸ்லோ உடன்பாட்டுக்கும் விடுதலைப்புலிகள் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்பாட்டுக்கும் பின்னால் செயல்பட்டவர் எரிக் செல்ஹெய்ம் என்பது தெரிந்த விடயமே. ஈழத்தமிழரது அரசியலோடு அதிகம் பரீட்சயமும் தொடர்பும் உடையவர். சமாதானக் காலம் முழுவதும் கொழும்பு, புதுடில்லி, வாஷிங்டன் மற்றும் கிளிநொச்சி என்ற ஒழுங்கைப் பேணியதுடன், அதனூடாக ஆயுதப் போராட்டத்தை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்றவர்



என்பதை கருத்தில் கொள்தல் அவசியமானது. அத்தகைய இராஜதந்திரியை ஜனாதிபதி ஆலோசகராக நியமித்துள்ளமை சாதாரண விடயமாக நோக்க முடியாது. தென்னிலங்கை அரசாங்கமும் அரசியல்வாதிகளும் அதிகம் குழப்பமடைந்திருப்பது ஜெனீவாவில் ஏற்பட்ட நெருக்கடியினால் ஏதாவது ஈழத்தமிழருக்கு ஏற்பட்டு விடுமா என்றே.

இதில் மேற்குலகம் மட்டுமல்ல தற்போது இந்தியாவும் அந்த விடயத்தில் தென்னிலங்கையின் நிகழ்ச்சி நிரலை குழப்ப முயல்வதாகவே இலங்கை அரசாங்கம் கருதுகிறது. இந்தியாவுக்கு எதிராக இலங்கை காணப்பட்டாலும் தனது நிகழ்ச்சி நிரலை இந்தியா மூலம் தென்னிலங்கை கையாண்டு வந்தது என்பது கடந்தகால பதிவுகளாகும். ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மீது சீனாவின் செல்வாக்கு அதிகரிப்படைய இந்தியா குழப்பமடைந்துள்ளதுடன், ஈழத்தமிழரது அரசியலை முதன்மைப்படுத்த ஆரம்பித்துள்ளது. இதில் இலங்கை அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் வருமாயின் அதாவது இந்தியாவின் விருப்புகளை திருப்திப்படுத்த தென்னிலங்கை உடன்படுமாயின் ஈழத்தமிழரது அரசியல் அந்த இடத்திலிருந்து நகராது விளங்கும் போக்கினையே இந்தியா கடைப்பிடித்து வந்துள்ளது. ஆனால் தற்போது தென்னிலங்கையின் கட்டுப்பாட்டில் சீனா இல்லை என்பதும் சீனாவின் செல்வாக்குக்குள்ளேயே இலங்கை அரசியல் காணப்படுகின்றது என்பதுவுமே இந்தியாவின் குழப்பமாகும்.

சீனா வடக்கு, கிழக்கில் ஆழமாக தனது செல்வாக்கினை வலுப்படுத்தி வருகிறது. அது சீனாவின் இந்து சமுத்திர அரசியலின் ஒரு பகுதியாக மாறியுள்ளது. இந்தியா சீனாவின் அரசியலை முறியடிக்க மீண்டும் ஈழத்தமிழரது அரசியலை முன்னிறுத்தியுள்ளது. 1970-1980களில் அமெரிக்காவின் செல்வாக்கு இலங்கைத்தீவில் வலுவடைய முயன்றபோது ஈழத்தமிழர்கள் முதன்மைப்படுத்தப்பட்டது போல் இந்தியாவால் மீளவும் சீனாவின் செல்வாக்கினை கையாள ஈழத்தமிழர்கள் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அதில் ஓரங்கமாகவே ஈழத்தமிழர் புதுடில்லி சந்திப்புகளும் மாநாடுகளும் நிகழ்ந்துள்ளன. அவ்வாறான நிகழ்ச்சி நிரலாக வடக்கு, கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களின் அறிக்கைகள், தமிழ் அரசியல் கட்சிகளது பாராளுமன்ற உரையாடல்கள் மற்றும் தமிழகம் நோக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரது சந்திப்புகள் நிகழ்ந்து வருகின்றன.

இந்தியாவும் ஜெனீவாவில் இலங்கைத் தீலின் பொருளாதாரத் தீர்வும் அரசியல் தீர்வும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றதெனக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும். ஆனால் இத்தகைய உரையாடல்கள் வழமையானதாக அமையாது ஈழத்தமிழருக்கு ஒரு தெளிவான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துமாக அமைந்தால் ஆரோக்கியமானது. அதனைக் கடந்து சீனாவை மட்டுமே கையாளுவதற்கானதாக அமைந்தால் அதன் விளைவுகள் பாரதூரமானதாகவே அமைய வாய்ப்புள்ளது.

இந்திய-சீன உறவானது பொருளாதார ரீதியில் பரஸ்பரம் வலுவானதாகும். இரு நாட்டினது வர்த்தகம் பலமானது. அது மட்டுமன்றி இந்தியா சீனாவுடன் வெளிப்படையாக மோதிக் கொள்ள தயாரில்லாத நிலை உள்ளது. சங்ஹாய் மாநாட்டிலும் பிரிக்ஸ் ஒத்துழைப்பிலும் நெருக்கமான உறவுள்ள இரு நாடுகளும் ரஷ்ய-உக்ரைன் போருக்குப் பின்னர் பலமான உறவை கட்டியெழுப்பி வருகின்ற நாடுகள் ஈழத்தமிழருக்காக ஒரு போதும் மோதிக்கொள்ளப் போவதில்லை .

ஆனால் ஈழத்தமிழரைக் கொண்டு சீனாவின் இலங்கைத்தீவு மீதான பிரசன்னத்தை முடிவுக்கு கொண்டு வர முயல்கிறது. அதனையே தென்னாசிய பிராந்திய நாடுகளது உறவின் மூலம் ஏற்படுத்த விளைகிறது. இத்தகைய அரசியலை ஈழத்தமிழர்கள் கவனத்தில் கொள்ளத் தவறக்கூடாது.

இத்தகைய சூழலிலேயே தென்னிலங்கையில் மீளவும் எழுச்சிகரமான அரசியலுக்கான தளத்தை மொட்டுக் கட்சியினர் போடத் திட்டமிட்டுள்ளனர். ஜெனீவா முதல் வடக்கு, கிழக்கு வரையான மாற்றங்களை கண்டு கொண்ட தென்னிலங்கை அரசியல் சக்திகள் உணர்ச்சி வசமான தேசியவாதத்தை மீளவும் பலப்படுத்திக் கொள்வதன் மூலம் தமது அரசியலை வலுவானதாக்க முனைகின்றனர். கடந்த காலத்திலும் உணர்ச்சிகரமான தேசியவாதமே அவர்களது அரசியல் முதலீடாகும். இன்னோர் வகையில் கூறுவதாயின், ஏனைய தேசியங்களுக்கு எதிரான உணர்ச்சி வசமான தேசியவாதமே தென்னிலங்கை அரசியல்வாதிகளின் அரசியலாகும். அதனை மீளவும் முதன்மைப்படுத்துவதன் மூலம் ஈழத்தமிழருக்கான வாய்ப்புகளை தோற்கடிப்பதுடன், தமது அரசியல் பலத்தை


**கட்டுரையாளர்:**
**தாயகத்தில் இருந்து**
**-K.T.கணேசலிங்கம்-**




யும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் எனக் கருதுகின்றனர்.


இதில் இரு நகர்வுகளை தென்னிலங்கை மேற் கொள்ள ஆரம்பித்துள்ளது. அதாவது ஈழத்தமிழர்-புதுடில்லி உறவு பலமடைய ஆரம்பித்துள்ளதை அடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், தனது மிதவாத முகத்தை மேற்கு வகத்திற்கு காட்டும் விதத்தில் சில நகர்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. கைதிகள் விடுதலை, காணாமல் போனோருக்கான கொடுப்பனவு, உள்நாட்டுப் பொறிமுறை உருவாக்கம் என பல விடயங்களை வெளிப்படுத்துவதோடு ஈழத்தமிழருக்கான அரசியல் தீர்வொன்றை நோக்கிய நகர்வை முன்வைக்க ஆரம்பித்துள்ளது.

அத்தகைய விருப்புகளை மேற்கொள்ளும் தளத்திலேயே எரிக் சொல்ஹெய்ம் நிறுத்தப்பட்டுள்ளார். அவரின் மூலம் மேற்குலகம் திருப்திப்படுத்தப்பட வாய்ப்புள்ளது. மறுபக்கத்தில் தீவிர போக்குடைய அதேநேரம் அரசாங்க கட்சியான பொதுஜன பெரமுனவையும் அதன் தலைமையையும் உணர்ச்சி வசமான தேசியவாதத்தின் மூலம் உலகளாவிய, பிராந்திய, மிதவாதப் போக்குகளை தகர்ப்பதற்கான நகர்வாகவுள்ளது. 1945 முதல் இத்தகைய உத்தியையே தென்னிலங்கை பயன்படுத்தி வந்துள்ளது என்பதை கவனத்தில் கொள்வது அவசியமானதாகும். அதாவது ஒன்றின் மூலம் தமது நலன்களை சாதிக்க முடியாது விட்டால் இரண்டாவது நகர்வை மேற்கொண்டு அத்தகைய நலனை அடைவதே அத்தகைய உத்தியாகும்.

இலங்கைத்தீவில் இத்தகைய இக்கட்டான சூழலை பயன்படுத்திக் கொண்டு இந்தியா மட்டுமல்ல அனைத்துத் தரப்புகளும் 13ஐ ஈழத்தமிழரது அரசியல் தீர்வாக அமுல்படுத்திவ ிட முயல்வது போல் தெரிகிறது. தென்னிலங்கை ஒற்றையாட்சிக்குள் தீர்வை திட்டமிடுகிறது. இந்தியாவும் மேற்கும் 13க்குள் தீர்வு அமைய வேண்டும் என விரும்புகின்றன. இதில் ஈழத்தமிழர்களே தமக்கான தீர்வைப் பற்றிய புரிதலையும் உரையாடலையும் உருவாக்க வேண்டும். ஈழத்தமிழர் - புதுடில்லி சந்திப்புகளிலும் அதன் பின்பும் 13ஐ முழுமையாக அமுல்படுத்தல் என்ற உச்சரிப்பு அதிகரித்துள்ளது.

(20ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதிலும் தெளிவான சிந்தனை இருக்கும். மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்கள் மூலம் நன்மை உண்டாகும். வியாபாரத்திற்கு தேவையான நிதி உதவியும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு, கூடுதல் பொறுப்புகள் கிடைக்க பெறலாம்.




ரிஷபராசி அன்பர்களே! எதிர்பார்த்த நல்ல செயல்கள் நடக்கும். கடன் பிரச்னைகள் தொல்லை தராமல் இருக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்புகள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்பார்த்த பணவரத்து இருந்தாலும் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். போட்டிகள் தொல்லை தராமல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து காணப்படுவர்.




மிதுனராசி அன்பர்களே! சாமர்த்தியமாக பேசி காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நன்மையாக இருக்கும். பூர்வீக சொத்து க்களில் இருந்த தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். பார்ட்னர்கள் ஒத்துழைப்புடன் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள். ஏற்றுமதி சம்பந்தமான துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும்.




கடகராசி அன்பர்களே! சுபகாரியங்களில் கலந்து கொள்வீர்கள். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். தேவையற்ற கவலைகள் நீங்கும். உங்களை பற்றி விமர்சனம் செய்து வந்தவர்கள் அதனை விட்டு விடுவர். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பர். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.



சிம்மராசி அன்பர்களே! துணிச்சலாக எதையும் செய்து முடிப்பீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். அரசாங்கம் மூலம் லாபம் உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படையும். கடன் பாக்கிகள் வசூலாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். உத்தியோகத்தில் பணிக் கஷ்டங்கள் குறையும்.



கன்னிராசி அன்பர்களே! நினைத்த காரியம் நிறைவேறும். எதையும் மனோ தைரியத்துடன் செய்து முடிப்பீர்கள். வீடு தொடர்பான பணிகள் விரைந்து நடக்கும். நெருக்கடியான நேரத்தில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் உண்டாகும். எதிர் பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் பற்றி ஆலோசிப்பர்.குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலை மாறி மகிழ்ச்சியான நிலை வரும்.




துலாம் ராசி அன்பர்களே! எதிலும் அவசரப்படாமல் நிதானமாக முடிவு எடுப்பது நன்மை தரும். மனதில் இருந்த கவலைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செலவும் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் பெறுவதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தயக்கத்துடன் தங்களது பணிகளை செய்ய வேண்டி இருக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும்.




விருச்சிகராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் கடும் முயற்சிக்குப் பின் வெற்றி கிடைக்கும். வீடு, வாகனம் போன்றவற்றை புதுப்பீர்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். புதிய ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் திறமையாக பணிகளை செய்து பாராட்டு பெறுவர். பதவி உயர்வும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும்.







தனுசராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும். வீண்கவலை நீங்கும். ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரம் விருத்தியடையும். ஏற்கனவே வரவேண்டி இருந்து வராமல் நின்ற ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் குறையும். புதிய வீடு வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.



மகரராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலைகள் நீங்கி நிம்மதி உண்டாகும். வர வேண்டிய பணம் வந்து சேரும். சாமர்த்தியமான பேச்சினால் காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அடிக்கடி கனவுகள் வரக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து மனநிறைவு அடைவர். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும்.



கும்பராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தந்தை மூலம் செலவு உண்டாகலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான நிலை காணப்படும் குடும்பத்தில் பிரச்சனை தலைதூக்கி பின்னர் சரியாகும்.



மீனராசி அன்பர்களே! மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். உடல் ஆரோக்கியத்தை தரும். வீண் கவலை நீங்கும். தடைபட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை காணப்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இருந்த தடைகள் விலகும். போட்டிகள் குறையும், குடும்பத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான போக்கு காணப்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழரசுக்கட்சியின் எதிர்காலம்?

17ம் பக்கத் தொடர்ச்சி) மட்டுமல்ல, எந்தத் துறைக்கும் பொதுவான விதியாகும். அப்படி மக்களுடைய நெருக்கடிகள் தீர்க்கப்படாமல்,அவர்களுடைய வாழ்க்கை மேலும் சிக்கலுக்குள்ளாகி வருகிறது என்றால், அந்த அரசியலினால் பயனில்லை என்றே அர்த்தமாகும். இதற்கு மேல் இதற்கு விளக்கம் தேவையில்லை.

நீங்கள் உங்களுடைய சொந்த வாழ்க்கையில் பயன் தராத எதையும் தொடர்ந்து செய்யமாட்டீர்கள். அதை ஆதரிக்கவும் மாட்டீர்கள். அதை வைத்துக் கொண்டிருக்கவும் மாட்டீர்கள். அதை விட்டு விலகவோ அல்லது அதை விலக்கவோ தான் முயற்சிப்பீர்கள். இதுதான் நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றப்படுவது. அதாவது, காய்க்காத தென்னையை தொடர்ந்தும் விட்டு வைக்க மாட்டீர்கள். கன்று ஈணாத, பால் தராத பசுவை யாரும் வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால், எந்தப் பயனும் தராத ஒரு அரசியற் கட்சியை தமிழர்கள் எப்படி தொடர்ந்தும் ஆதரித்துக் கொண்டிருக்க முடியும்? அப்படி ஆதரித்தால் அது மடத்தனமாகும் அல்லவா!

அரசியலில் ஒரு தரப்பை ஏற்பதும் நிராகரிப்பதும் அந்தத் தரப்பின் மக்கள் மீதான கரிசனை, அதன் செயற்பாட்டுத்திறன். அர்ப்பணிப்பு, நேர்மை, அது மக்களுக்கு ஈட்டித் தரும் வெற்றிகள் போன்றவற்றினாலேயே அமையும். இதற்குத்தான் தேர்தல்கள் வருகின்றன. எந்த முன்னேற்றமும் அற்று, எத்தகைய நன்மையும் இல்லாம் தொடர்ந்தும் ஒரு தரப்பை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் அது மூடத்தனம். அடிமைத்தனமன்றி வேறில்லை. இத்தகைய மூடத்தனத்தினால்தான் மக்கள் நலிந்து கொண்டு போகிறார்கள். தலைவர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தலைவர்களுக்கு சொம்பு தூக்கும் ஆட்களும் பெருகிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தான் தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் எப்படியாக இருக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது. வினைத்திறனற்ற, கால இழுத்தடிப்பில் சலித்துப் போனதால் தான் தமிழரசுக் கட்சியை விட்டு மக்கள் விலகிச் சென்று கொண்டிருக்கின்றனர். இதைச் சிலர் மறுத்துரைக்கக் கூடும். இல்லை. இப்பொழுதும் தமிழரசுக்கட்சிக்குத் தான் மக்களிடத்திலே ஆதரவுண்டு. அதுவே அடுத்த தேர்தலிலும் வெற்றியடையும் என்று அவர்கள் சொல்லலாம். அப்படியென்றால் தமிழ் மக்கள் இன்னும் பல ஆண்டுகளுக்கு விடுதலையைப் பெற முடியாமல், முன்னேற்றம் எதையும் காணாமலே இருக்கப்போகிறார்கள். அல்லது கோத்தபாய ராஜபக்ஸ பெற்ற வெற்றியைப் போல வாக்களித்த மக்களுக்கே நன்மையில்லாத வகையில்தான் அது இருக்கும்.

இவ்வாறன சரிவு ஏற்பட்டிருக்கும் இந்த நிலையிற்கூட தமிழரசுக் கட்சி தன்னை மறுபரிசீலனை செய்து கொள்ளவில்லை. அதை ஆதரிப்போரும் இதைக் குறித்தெல்லாம் சிந்திக்கவில்லை. தமிழரசுக் கட்சிக்குள்ளே நடந்து கொண்டிருக்கும் மோதல்கள் இதை நிரூபிக்கின்றன. அதனுடைய மூத்ததலைவர் சம்மந்தனுடைய சொல்லை யாரும் கேட்பதாக இல்லை. தலைவர் மாவை சேனாதிராஜா செல்லாக்காசாக்கப்பட்டுள்ளார். ஆனாலும் இவர்கள் உயிரோடு இருக்கும் வரையில்தான் தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பும் இந்த வடிவத்தில் இருக்கும். அதற்குப் பின்னர் அது எப்படி இருக்கும் என்பதை அனைவரும் அறிவர். உடைந்து சிதறி உக்கிப் போய் விடும்.

இப்பொழுது தமிழரசுக் கட்சியின் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜாவுக்கு எதிரான குரல்களும் நடவடிக்கைகளும் வெளிப்படையாகவே முன்வைக்கப்படுகின்றன. மாவைக்கு எதிராக பலரும் வயிறு பொருமுகிறார்கள். மாவைக்குப் பின்னர் அந்த இடத்துக்கு வருவதற்கு சுமந்திரன் மிகத்திறமையாக வியூகங்களை வகுத்துக் கொண்டு செயற்படுகிறார். ஒரு கட்டம் வரையில் அவர் சிறிதரனை இதற்கு அனுசரணையாகப் பாவித்தார். ஆனால், சிறிதரனுக்கு தலைமைத்துவக் கனவு உண்டு என்று தெரிந்தவுடன், அவரை விட்டு விட்டு சாணக்கியனைக் கைக்குள் போட்டுக் கொண்டு செயற்படுகிறார். சாணக்கியன் கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்கின்றவர் என்பதாலும் மொழி, தொடர்பாடல், திறமை போன்றவற்றால் மேலெழுந்திருப்பவர் என்பதாலும் சுமந்திரனுக்கு இது சாதகமானது.

இதேவேளை சி.வி.கே சிவஞானத்துக்கும் அந்தக் கனவுண்டு. சரவணபவன் நீண்ட கால அடிப்படையில் அதற்காகக் காத்திருப்பவர். துரைரத்தினசிங்கம் மல்லுக்கட்டிப் பார்த்துக் களைத்து விட்டார். சி.க. சிற்றம்பலம் சலித்துப் போய்த் தூரப்போய் விட்டார். இப்படி ஆளாளுக்கு தலைமைத்துவக் கனவோடிருக்கிறார்களே தவிர, கட்சியை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு யாரும் முயற்சிக்கவில்லை. இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் இடமளிக்க வேண்டும். செயற்பாட்டுக்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அதை இயங்க வைக்கும் பொறிமுறையை உருவாக்க வேண்டும். மக்களுடைய பொருளாதாரம் பற்றிச் சிந்திக்க வேண்டும். யுத்தப் பாதிப்புகளுக்கு உரிய நிவாரணப் பொறிமுறையைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். சர்வதேச சமூகத்துடன் மேற்கொள்ளக் கூடிய அரசியல் உறவு எப்படி அமைய வேண்டும்? சிங்களத் தரப்போடு மேற்கொள்ளக் கூடிய அரசியல் எத்தகையதாக இருக்க வேண்டும்? குறிப்பாக யுத்தத்துக்குப் பிந்திய அரசியல் எப்படி அமைய வேண்டும்? அதை எப்படி மேற்கொள்வது? என்பதைக்குறித்து அதற்குள் ஒரு சிறு உரையாடலோ விவாதமோ நடந்ததே இல்லை.

மட்டுமல்ல, அது இணைந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டைப்புக்குள்ளும் ஏராளம் குத்து வெட்டுகள். இதனால் தமிழரசுக் கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கே கூட்டமைப்பிலுள்ள ரெலோவும் புளொட்டும் சிந்திக்கின்றன. இது அவற்றுக்குத் தவிர்க்க முடியாதது. அந்தளவுக்கு ரெலோவையும் புளொட்டையும் தமிழரசுக் கட்சி பாடாய்படுத்திக் கொண்டிருக்கிறது. இப்பொழுதே ரெலோ பல விடயங்களிலும் வெட்டியோடுகிறது. இதற்குத் தோதாக பிராந்திய சக்திகளும் சர்வதேச சக்திகளும் உதவுகின்றன. சம்மந்தனுடைய மறைவுக்குப் பிறகு நிச்சயமாக ரெலோவும் புளொட்டும் தமிழரசுக் கட்சிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கும். அல்லது வேறு லைன் ஒன்றை எடுக்கும். இந்தச் சவாலை அது எதிர்கொண்டே தீர வேண்டும்.

இந்த மாதிரி தமிழரசுக் கட்சிக்குள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளுக்குள்ளும் நடந்து கொண்டிருக்கும் குத்து வெட்டுக்களால் தமிழ்ச்சமூகம் வீழ்ச்சியையே சந்தித்துக் கொண்டிருக்கிறது. இதனால் மக்களுக்குச் சலிப்பும் நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளது. இதெல்லாம் மக்களிடத்தில் வெறுப்பையும் கோபத்தையும் வளர்த்துள்ளன. இது மக்களை, அவர்களுடைய நெருக்கடிகளை, அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காத பொறுப்பின்மையின் விளைவாகும். அதாவது மக்களை உதாசீனப்படுத்துகின்ற போக்காகும். இதற்கான காரணம், மக்களையோ வெளிப்பரப்பையோ (அரசாங்கத்தையோ சர்வதேச சமூகத்தையோ) பற்றிச் சிந்திக்காமல் தம்மைப் பற்றி, தமது நலனைப்பற்றிக் குறுகலாகச் சிந்திக்கின்றமையே ஆகும்.

நடந்து கொண்டிருக்கும் கீழ்மையான மோதல்களும் நெருக்கடிகளும் எதிர்த் தரப்புக்கே கதவுகளைத்திறந்து விடுகின்றன. ஒடுக்குமுறையைச் செய்யும் தரப்புகளுக்கு இது வாய்ப்பாகி விடுகிறது. மறுவளமாக உள் —வெளி நெருக்கடிகளால் தமிழரசுக் கட்சி சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து அது மீளுமா? என்பது கேள்வியே.





உ

சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.com

Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## ஸ்கந்த ஷஷ்டி உற்சவ பெருவிழாவும் ஸ்கந்த மஹாயாகமும்

## 25.10.2022 செவ்வாய்க்கிழமை முதல் 31.10.2022 திங்கட்கிழமை வரை



கந்தன் மெய்யடியார்களே!

விரத வழிபாட்டிற்கே சிறப்பான ஆலயமாக விளங்கும் கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் ஸ்கந்த ஷஷ்டி விரதத்தை முன்னிட்டு தனிப்பெரும் சன்னிதானமாக எழுந்தருளி அருள்பாலித்து வரும் கலியுக தமிழ் கந்தன் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானுக்கு 25.10.2022 செவ்வாய்க்கிழமை முதல் 31.10.2022 திங்கட்கிழமை வரை காலை, மாலை உற்சவமும், ஸ்கந்த மஹாயாகமும், தேர், சூரன்போர், தீர்த்தம், பாரணை பூஜை, திருக் கல்யாணம் என்பன மிக சிறப்பாக நடைபெறவுள்ளது. விரதத்தின் மேன்மையும், பக்தியும், நற்பலனையும் தரக்கூடிய ஸ்கந்த மஹாயாகம், திருவிழா காலங்களில் அடியார்கள் தவறாது வருகை தருவதுடன் முடிந்த உபயங்களை பொறுப்பேற்று நற்பலன் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ விரதாதிகளுக்குப் பால், பழம் ஆலயத்தில் வழங்கப்படும்.

☞ மாலை 5.00 மணிமுதல் கந்தபுராணபடலம் வாசிப்பு நடைபெறும்.

## ஸ்கந்த ஷஷ்டி விரத கிரியை நிகழ்ச்சிகள்

| காலை | | மாலை |
|---|---|---|
| 7.00 மணி | ஆலயம் திறத்தல் | 5.00 மணி |
| 9.30 மணி | 10 கும்ப அபிஷேகம் | 6.00 மணி |
| 10.15 மணி | ஸ்கந்த மஹாயாகம் | 6.45 மணி |
| 11.00 மணி | சிறப்புப் பூஜை, வசந்த மண்டப பூஜை | 7.30 மணி |
| 11.45 மணி | முருகன் புறப்பாடு, யாக தரிசனம் | 8.15 மணி |
| 12.45 மணி | பிரசாதம் வழங்குதல் | 9.00 மணி |

24.10.2022 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கணபதி ஹோமம் மாலை அனுக்ஞை, வாஸ்து சாந்தி, அங்குரார்ப்பணம், கடஸ்தாபனம், யாகசாலை பிரவேசம், பூர்வாங்க பூஜை



### 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை

### காலை - தேர்த்திருவிழா மாலை - சூரன்போர் உற்சவம்

### தேர்த்திருவிழா நிகழ்ச்சி நிரல்

காலை 8.00 மணி - 108 சங்காபிஷேகம், காலை 9.00 மணி - சிறப்பு பூஜைகள், யாகம்
காலை 10.30 மணி - வசந்த மண்டப பூஜை நடைபெற்று,
காலை 11.00 மணிக்கு சண்முகநாதப் பெருமான் அழகிய சித்திரைத் தேரில் பவனி வரும் அருட்காட்சியும், பச்சை சாத்தி ரத அவரோகணம், பிராயசித்த அபிஷேகமும் நடைபெறும்.

### சிறப்புமிக்க சூரன் போர் உற்சவம்

30.10.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி முதல் 10 கும்ப அபிஷேகம், பூஜைகள் நடைபெற்று 7.00 மணிக்கு சூரன் போர் நடைபெறும். இரவு 8.30 மணிக்கு பிரயசித்த அபிஷேகம் நடைபெறும்.
அடியார்கள் காலை, மாலை பால்குட அபிஷேகம் செய்து கொள்ளலாம்.

### 31.10.2022 புதன்கிழமை காலை தீர்த்தம் - பாறணை

பாறணை அதிகாலை 4.30 மணிக்கு அபிஷேகம், பூஜைகள் நடைபெற்று முருகப் பெருமான் புறப்பாட்டுடன் தீர்த்தத் திருவிழாவும், யாக கும்ப அபிஷேகமும், பாறணை பூஜையும் நடைபெற்று விரத அன்னதானம் வழங்கப்படும்.

### 31.10.2022 புதன்கிழமை மாலை திருக்கல்யாணம்

31.10.2022 மாலை 5.00 மணிக்கு அபிஷேக பூஜைகள் நடைபெற்று, மாலை 7.00 மணிக்கு முருகப்பெருமானுக்கு திருக்கல்யாணம் நடைபெறும்.

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599* FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500



அபாயம் உண்மையாகலாம்.

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |


Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%




iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.